# தேடி வந்த தென்றல்

ஜெய்சக்தி



## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : தேடி வந்த தென்றல் |
| ஆசிரியர் | : ஜெய்சக்தி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : ஏப்ரல், 2007 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 272 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |
| கணினி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ✆ 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்<br>சென்னை-14. |

**விலை: ரூ.80.00**




# தேடி வந்த தென்றல்

# தேடி வந்த தென்றல்

## 1



"என்னம்மா கவி! நல்லாருக்கியா?" என்றார் கனக சுந்தரம்.

"நல்லாயிருக்கேன் அங்கிள்" என்றவள் உற்சாகமானாள். ஆனால் உற்சாகமெல்லாம் அடுத்த கணத்தில் வடிந்து போனது.

"அங்கிள், எப்ப இந்தியாவுக்குத் திரும்பி வருவீங்க?" என்றாள்.

"வரணும்மா. இந்தியாவுக்கு வர்றதாத்தான் இருக்கேன். இன்னும் நாலைஞ்சு வருஷம் ஆகும்மா!" என்றார்.

"அவ்வளவு நாள் ஆகுமா?" என்றவள் குரலில் கலவரம் தொனித்தது.

''ஏம்மா!'' என்றார்.

''ஐ ஃபீல் லோன்லி. அங்கிள் குருவி தலையில் பனங்காய் வைச்ச மாதிரி எல்லா பாரத்தையும் அப்பா.. அப்பா..!'' என்று திணறியவள் கேவி அழுதாள்.

கனகசுந்தரம் திகைத்துப் போனார்.

''அம்மா... என்னம்மா.. நீ ரொம்ப போல்டுன்னு கேள்விப்பட்டிருக்கேன்.''

''போல்ட்தான். ஆனா, இதுவரைக்கும் எதிலயுமே என்னை இன்வால்வ் பண்ணாம விட்டுட்டாரே அப்பா! இப்படி திடீர்னு போயிட்டாரே! நான் எத்தனையைச் சமாளிக்கறது. பழையபடி நீங்களே பார்ட்னரா வந்திருங்க அங்கிள். கொஞ்சம் பாரம் குறையும்'' என்றாள்.

''ஓ! இப்ப என்னென்ன கன்ஸர்ன் போயிட்டிருக்கு?'' என்றார்.

''அந்த பம்பு செட் தயாரிக்கிற கம்பெனி, அப்புறம் ஸ்டேஷனரி ஹோல் சேல் மார்க்கெட்டிங், கார் ஏஜென்சி... இதுல எல்லாம் எனக்கு என்ன அங்கிள் தெரியும்? நல்ல வேளையா, பழைய மேனேஜர் ராமபத்ரன். அன்பானவர். கம்பெல் பண்ணி கூட்டிட்டு வந்தோம், அவருக்கும் வயசாயிடுச்சு. தள்ளாடிக்கிட்டிருக்கார், அங்கிள். இந்தியா வந்திடுங்க!'' என்று மறுபடியும் கலங்கினாள்.

''சரிம்மா... சரிம்மா! அழாதே! நான் ஒருத்தன் உயிரோட இருக்கிற வரைக்கும் கவலைப்படாதேம்மா...!'' என்றார்.

''அப்பாவும் இப்படியே தான் சொல்லிகிட்டு இருந்தாரு. திடீர்னு போயிட்டாரு. கடவுள் உங்களுக்குத் தீர்க்காயுசைக் கொடுக்கட்டும். நீங்களாவது ஒரு தடவை வந்திட்டுப் போங்க மாமா!'' என்றாள்.



''சரிம்மா! நான் வர்றேன். இல்லைன்னா உனக்கு ஏதாவது நல்ல ஏற்பாடா செய்றேம்மா, கவலைப்படாம விரு! நான் நாளைக்கே மேனேஜர்கிட்டே பேசறேன்ம்மா. அங்க எல்லாம் பாதுகாப்பாக இருக்குதில்லே!'' என்றார்.

''அதே பழைய வேலைக்காரங்கதான். டிரைவர் இருக்காங்க. அப்புறம்.. அப்புறம்...'' என்று நிறுத்தினாள்.

''சொல்லும்மா!''

''ஒண்ணு விட்ட சித்தி.. கற்பகவல்லியும் அவங்க பொண்ணு பாலாமணியும் துணைக்கு வந்திருக்காங்க'' என்றாள்.

மனம் மட்டும் ஓலமிட்டது. துணைக்கு இல்லை மாமா, வினைக்கு வந்திருக்காங்க என்று. ஆனால் எடுத்த எடுப்பிலேயே எல்லாவற்றையும் சொல்ல மனம் வரவில்லை.

''ஏம்மா... உங்க நெருங்கின சொந்தக்காரங்க...''

''எல்லாரும் பணத்துக்கே ஒட்டறாங்கன்னு அப்பா தான் எல்லாத்தையும் தூரத்திலேயே வைச்சிட்டாரே.''

திரும்பவும் கேட்டார் ''ஏம்மா... அந்தக் கற்பகம்மா... யாரு?'' - என்றார்.

''மாமா பாப்பம்பட்டி கற்பகவல்லியாம். அவங்க என்னென்னமோ சொல்றாங்க. பழைய ஆளுங்களைக் கேளு! நான் எவ்வளவு சொந்தம்னு தெரியும்கறாங்க!... பழைய மேனேஜரைக் கேட்டேன். அவரு அந்த பேரைக் கேட்டிருக்கிறேன் என்கிறாரு.''

''ஓ! அந்த கற்பகவல்லியா? இத்தனை நாள் அந்த அம்மா எங்கே.. போச்சு.?''

''என்னால ஓங்கிப் பேச முடியல மாமா. அந்த அம்ம அடிச்சுப் பேசுறாங்க... அந்த பாலாமணி... பாலாமணி.. என்று தேம்பினாள்.

''வேண்டாம் விட்டுரு. கவி இன்னொரு நாளைக் அதைப் பேசலாம். நான் கண்டிப்பா ஏதாவது ஏற்பா செய்யறேன்'' என்றார்.

கவிப்பிரியா எல்லையற்ற அளவுக்கு நிம்மதியாய் உணர்ந்தாள், ''சரிங்க... மாமா! தேங்க்ஸ் மாமா'' என்றாள்.

தந்தை இறந்ததற்குப் பிறகு அன்றைக்குத்தான் சற்றே தெம்பானாள்.

தந்தை கிருஷ்ணசாமி நன்றாக நடமாடிக் கொண்டிருந்தவர் மகளைத் தங்கத் தட்டில் வைத்து தாங்காத குறையாக வளர்த்தவர், தனது நடுத்தர வயதில் திடீரென்று மாரடைப்பால் காலமானார்.

அது நடந்து இரண்டு மாதம்தான் இருக்கும்.

''டேய்! பிரியா!'' என்று ஆசையாக அழைத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தவர் சற்று அளவளாவலுக்குப் பின் திடீரென்று நெஞ்சை வலிக்கிறது என்றார். அடித்துப் பிடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் புறப்படுவதற்குள் சிவனடி போய் சேர்ந்து விட்டார்.

நெருங்கிய உறவுக்காரர்கள் எல்லாரும் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டனர், கலங்கிப் போய் இருந்தவளுக்கு பழைய மேனேஜர் ராமபத்ரன் உதவிக்கு வந்தார்.

''நான் கூட இருக்கேம்மா தைரியமா இரு'' என்று எல்லாவற்றையும் ஒழுங்கு பட நடத்தினார், ஒரே மகள் என்பதால் சொத்து பற்றிய பிரச்னையோ வேறு எதுவுமோ இருக்கவில்லை.

ராமபத்ரன் திரும்பவும் வந்து விட்டார் என்றவுடனேயே இடைப்பட்ட காலத்தில் திருடலாம் என்று வந்திருந்தவர்களுக்கு எல்லாம் அதற்கும் வழியில்லாமல் போனது. ஆனால் பிரச்னை வேறு வகையில் முளைத்தது.

ஒரு மாதத்துக்கு முன்!

அவள் காலை நேரத்தில் மாடியில் இருந்து கீழே இறங்கி வரவும் அந்தப் பெண்மணியும் அந்த இளம் பெண்ணும் உள்ளே நுழைந்தார்கள்.



''ஐயோ... என் ராசா... தர்மதுரையே...'' என்று பிலாக்கணம் வைத்தார் கற்பகம்மா.

அவளும் இதுவரை எதிர்கொண்டது மாதிரியே யாரோ அப்பாவுக்கு வேண்டியவராக இருக்கும் என்று உபசரணையாகவே பேசினாள்.

இரண்டு நாட்களாயிற்று.. மூன்று நாட்களாயிற்று.. கிளம்பக் காணோம். அந்தப் பெண் பாலாமணியும் அக்கா.. அக்கா.. என்று இழைந்தாள். முதலில் மிகவும் பணிவாக இருந்தார்கள், அவளுக்கும் அவர்கள் இருப்பது ஒரு தெம்பாகவே இருந்தது.

''இரண்டு மாதம் கழித்து ஒரு நாள்! கற்பகவல்லியம்மா அம்மா பிரியா நாங்க ஊருக்குப் போகலாம்னு இருக்கோம்'' என்றார்.

கவிப்பிரியா ''சின்னம்மா! நீங்க எதுக்குப் போகணும்னு சொல்றீங்க, உங்க ஊருல நீங்கதான் இருந்து நடத்தணுங்கற மாதிரி ஏதாவது இருக்கா என்ன?'' என்று கேட்டாள்.

கற்பகவல்லி நீண்டதொரு பெருமூச்சு விட்டார், ''ம்... அங்க அப்படி என்னத்த இருக்கு? கொஞ்சம் நிலமிருக்கு.. ஒரு வீடு இருக்கு.. எப்படியோ பொழப்பை ஓட்டிக் கிட்டிருந்தோம்'' என்றார் வெகு சோகமாக.

அந்த நேரத்தில் கவிப்பிரியாவின் நாக்கில் சனி புகுந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

''அப்புறம்... என்ன? அங்க எல்லாத்தையும் தெரிஞ்சவங்க யாராவது பொறுப்பில விட்டுட்டு நீங்க இங்கேயே இருங்க'' என்றாள்.

''நாங்க இருக்கத் தயார்தான்ம்மா. ஆனா பின்னாடி எதுவும் சங்கடம் வந்திடக்கூடாதில்லே'' என்றார் கற்பகவல்லி.

"எதுக்கு சங்கடம் வருது? நீங்க வீட்டை மேற்பார்வை பார்த்துக்குங்க.. பாலாமணிக்குன்னு ஒரு தொகை மாசம் பேங்க்ல போட்டர்றேன், கல்யாண செலவுக்கு ஆகுமில்லே'' என்றாள்.

''ம்...? என்னவோ நீயும் தனியா இருக்கே.. சின்னப் பொண்ணு, எனக்கும் ஒரு கடமை இருக்கு'' என்றார். கவிப்பிரியா நிம்மதியானாள்.

''எல்லாம் ஒரு மாதம் வரை தான், மெது மெதுவாக கற்பகவல்லியம்மா தன் சுயருபத்தை காட்டத் தொடங்கினார்.

வேலையாட்களின் மேல் அதிகாரம் தூள் பறந்தது. ''நான் கண்டிப்பாக இருந்தாத்தான் வேலைக்காரங்க சரியாக இருப்பாங்க...'' என்று விளக்கம் வேறு.

பல நாட்களாக அங்கு வேலைக்கு இருந்தவர்கள், விசுவாசமானவர்கள் எல்லாரும் அவளிடம் தனியாக வந்து முறையிட்டார்கள்.

''அம்மா... அந்த அம்மா சரியில்லையம்மா.. நோக்கம் நல்லதா தெரியலை.... அனுப்பிரலாம்மா அதுதான் நல்லது'' என்று.

கவனிக்க ஆரம்பித்தாள்.

சிறிய அளவுக்கு கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு தில்லு முல்லுகள் நடப்பது புரிந்தது. மெதுவாகக் கேட்டாள். ''அம்மா நீங்க சொன்ன விலைக்கும் பில்லுக்கும் வித்தியாசம் இருக்கே..'' என்று.

''பார்த்தியா சந்தேகப்படறே... இதுக்குத்தான் நான் இருக்க மாட்டேன்னு சொன்னேன். வேண்டாம்னா



சொல்லு கிளம்பிடறேன்'' என்று ஒரே போடாகப் போடவும் அவளுக்கும் சந்தேகம் விலகியது.

இந்த நாடகம் ஒரு இரண்டு மூன்று தடவை நடந்தது.

அதற்கு பிறகுதான் அவள் போய் தன் அப்பாவின் பழைய உதவியாளர் ராமபத்ரனை மீண்டும் அழைத்து வந்தாள். அங்கிள் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருக்குது. ஒரு ஆறு மாதம் ஒரு வருஷம் என்னோடு வந்து இருங்க'' என்று வேண்டிக் கொண்டாள். அவரது மகன் நல்ல நிலையில் இருந்தான். ''மேடம்! அப்பா இனிமேக் கொண்டு வேலைக்குப் போகணுங்கிற அவசியம் இல்லை'' என்று மறுத்தான். ஆனால் ராமபத்ரனுக்கு மனது கேட்கவில்லை.

''இருக்கட்டுண்டா... பரவாயில்லை. குழந்தை தனியா அவஸ்தைப் படறா. நான் கொஞ்ச நாள் இருந்துட்டு வந்துடறேன்'' என்று சொல்லிவிட்டு அவளோடு வந்திருந்தார்.

கவிப்பிரியாவின் பங்களாவிலே பின்னால் கெஸ்ட் அவுசில் தங்கினார்.

அவரும் கற்பகவல்லியின் ஆர்ப்பாட்டத்தை கவனிக்கத் தொடங்கினார். வெறுத்துப் போனார்.

''அம்மா.. இந்தம்மா ஆகாது. அனுப்பிடம்மா'' என்றார்.

அவளும் ஒத்துக் கொண்டாள்.

ஒரு நாள்,

நயமாகத் தெரிவித்தாள். ''அம்மா நீங்களோ ஊருக்குப் போறேன்னு சொல்லிக்கிட்டே இருக்கீங்க, உங்களையும் ரொம்ப நாளைக்கு நாங்க இங்கே தங்க வைக்க முடி

யாதுல்ல, நீங்க ஊருக்குப் போறதுன்னா புறப்படலாம்'' என்று.

கற்பகவல்லிக்குப் புரிந்தது.

வெளியே போ என்று சொல்லாமல் சொல்கிறாள் என்பது புரிந்தது.

அப்போதுதான் அந்த அம்மா அந்த வெடியைத் தூக்கிப் போட்டது.

''கவிப்பிரியா, நான் வெளியே போறதுக்கு எப்பவும் தயாரா இருக்கேன்... ஆனா நான் எதுக்கு வந்தேன் தெரியுமா? நானும் இந்த வீட்ல ஒருத்தியா இருக்கறதுக்கு பாத்யதை உள்ளவள் என்று சொல்லத்தான்'' என்றார்.

''என்ன சொல்றீங்க?''

''அம்மா நீ சின்னப் புள்ள. உங்கிட்ட எப்படிச் சொல்றதுன்னு புரியல. ஆனாலும் சொல்லித்தான் ஆகணும். உங்கம்மாவுக்கு சின்ன வயசிலேயே ஒடம்பு சரியில்லாம போயிடுச்சு. என்ன இருந்தாலும் அந்த வயசுல ஆண் பிள்ளைங்க எத்தனை நாள் தனியா இருப்பாங்க.. எங்க ஊருக்கு விவசாய விஷயமா அப்பப்ப வருவாரு. அப்போ எனக்கும்... அவருக்கும்..'' என்று நிறுத்தினார்.

கவிப்பிரியா வெறித்துப் பார்த்தாள். ''அப்படிப் பார்க்காதம்மா.. உங்கம்மா போற சமயத்துல உங்க ஊருக்கு வந்தாரு. வந்தவரு திரும்பி வரவே இல்லை. நான் இந்தப் பொண் குழந்தையை வைச்சிட்டு என்ன செய்ய... ஊரை விட்டேப் போயிட்டேன். திடீர்னு கைவிட்டுட்டுப் போய்ட்டாரேன்னு எனக்குக் கோவம். ஆனா இப்ப அவரே போயிட்டாருன்னு கேள்விப்பட்டதுக்கு அப்புறமும் கூட எனக்கு மனசு ஆறலே. அப்புறமாகத்தான் தெரிஞ்சது. நீ தனியா கஷ்டப்படறேன்னு. அதான் வந்தேன். வேலைக்



காரங்ககிட்ட கண்டிப்பா இருக்கிறது உனக்குப் புடிக்கலேன்னா நான் போயிடறேன். ஆனா இவ.... இந்த பாலா உனக்கும் தங்கைதான். அவ மட்டும் கஷ்டப்படறது நியாயமா? நீயே யோசித்துப் பாரு'' என்றார்.

கவிப்பிரியா திகைத்துப் போனாள். குரலே எழும்பாத குரலில் கேட்டாள்.

''நீங்க என்ன சொல்றீங்க? பாலா... அப்பாவுடைய?'' என்று நிறுத்தினாள்.

''ஆமாம்மா'' என்று பெருமூச்சு விட்டார் கற்பகம்மா, அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னார்.

''ஒரு நேரம் இல்லாட்டி ஒரு நேரம் எனக்கும் தோணும் இல்லே? ஒரு மக எல்லா சொத்தையும் அனுபவிச்சிட்டு ராஜ போகமா இருக்கா. ஆனா ஊரறிய சேர்ந்து வாழலேங்கற ஒரு காரணத்துக்காக என் பொண்ணு மட்டும் பிச்சைக்காரியாக வாழணுமான்னு? ஆனா நான் ஒண்ணும் சண்டை போட வரல. நீயே பார்த்து ஏதோ முடிஞ்சதைச் செஞ்சா சந்தோஷம்'' என்றார்.

கவிப்பிரியாவுக்கு பாவமாகப் போனது. யோசனையில் ஆழ்ந்தாள். ''சின்னம்மா நீங்க இன்னும் ஒரு மாசம் இங்கே இருங்க. நானும் அதுக்குள்ள என்ன செய்றதுன்னு யோசிக்கிறேன்'' என்றாள்.

''ஐயோ வேண்டாம்மா.. நீ திடீர்னு வேலைக்காரங்க பேச்சைக் கேட்டுட்டு எங்களை ரொம்ப கோவிச்சுக்குவே. ஆனா ஒண்ணு ஞாபகம் வைச்சுக்க. நான் போய் வெளியே நாலு பேருகிட்டே உங்கப்பாவுக்கும் எனக்கும் இருந்த உறவைப் பற்றியும் சொந்த பந்தத்தைப் பற்றியும் சொன்னா உங்க குடும்ப கவுரவம் என்னாகிறது'' என்றார் கற்பகவல்லி.

கவிப்பிரியா குழம்பிப் போனாள்.

ராமபத்ரனிடம் விசாரித்தாள். அம்மா கற்பகம்னு ஒரு லேடியோட அவருக்குத் தொடர்பு இருந்ததுன்னு ஒரு பேச்சு இருந்தது. ஆனா அது சரியான தொடர்பா இருந்திருந்தா உங்கப்பா கண்டிப்பா கல்யாணம் பண்ணியிருப்பாரு. என்ன காரணம்னு தெரியலை. உங்கம்மா இறந்ததுக்கு அப்புறம் கற்பகம்கிற பேரே அடிபடலை. அப்படியே அந்த அம்மாவுக்கு இங்க உரிமை இருந்தா ஏன் இது வரைக்கும் வரலை. அவர் உயிரோட இருக்கிற வரைக்கும் ஏன் நெருங்கவே இல்லை... முழுசா நம்ப முடியலைம்மா... பொறும்மா.. நல்லா விசாரிக்கலாம்... அப்புறம் முடிவெடுக்கலாம். அதுவரைக்கும் அந்த அம்மாவை நம்ம கண் பார்வையிலேயே வச்சுக்கலாம்'' என்றார்.

சரி என்று சம்மதித்தாள். ஆனால் நாளாக ஆக அவர்களது அட்டகாசம் அதிகமாகிக் கொண்டே போனது. அந்த வேதனையும் சேர்ந்து அவளைத் தாக்கவே தான் அப்படி கனகசுந்தரத்திடம் பொங்கிப் பொங்கி அழுதாள்.

அழுது முடித்ததற்கு அப்புறம் அவளுக்கு பாரம் இறங்கினாற் போல இருந்தது. ஆனால் கனகசுந்தரத்தின் நெஞ்சில் பாரம் ஏறிக் கொண்டது.



## 2

''பொறுங்க சின்னம்மா எனக்கு கம்பெனியெல்லாம் நிர்வகிக்க ஒரு மேனேஜர் தேடிக்கிட்டு இருக்கேன். அப்படி ஒருத்தரை அப்பாயின்ட் பண்ணிட்டேன்னா அதுக்கப்பறம் உங்க மேட்டர் என்னன்னு பாக்கறேன். நாம எல்லாரும் சந்தோஷமாக இருக்கலாம். நீங்க ஏன் கவலைப்படறீங்க?'' என்றாள் நயமாக.



கற்பகம் மகிழ்ச்சியாகத் தலையாட்டிவிட்டு சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்தார். பாலாமணிக்கும் கொஞ்சம் நல்ல உடைகள் வாங்கிக் கொடுத்தாள். அவளும் விதவிதமாக உடுத்திக் கொண்டு அலைந்து கொண்டிருந்தாள்.

மாமா என்ன விதமாக வழி கண்டுபிடிக்கப் போகிறார்? எப்படி தன்னுடைய பிரச்னையை தீர்க்கப் போகிறார் என்று அவளும் ஆவலாகக் காத்துக் கொண்டிருந்தாள். தீர்வும் வந்தது.

* * *

அம்மா உனக்கு உதவிக்கு ஒரு ஆள் அனுப்பறேன். எனக்கு நெருங்கின உறவுக்கார பையன். கெட்டிக்காரன். கொஞ்ச நாள் இங்க அமெரிக்காவில வந்து கூட எனக்கு உதவி செஞ்சிகிட்டிருந்தான். அருமையான ஆள். பாத்து யூஸ் பண்ணிக்கோ. ஆனா அவன் கிட்ட அவனைப் பத்தின பர்சனல் மேட்டர் பற்றி மட்டும் கேட்காதே. லைக் பண்ண மாட்டான்'' என்றார் கனகசுந்தரம்.

''சரிங்க மாமா'' என்றாள்.

அந்த மேனேஜரும் வந்தான்.

கவிப்பிரியா சற்றே திகைத்துத்தான் போனாள்.

இளைஞன்... மிக இளைஞன்.

''மேடம்! ஐ ம் கே.யு.சங்கர்'' என்றான்.

''வாங்க'' என்று வரவேற்றாள்.

வீட்டிலேயே முன்னால் இருந்த தனது அலுவலக அறையில் இருந்தாள்.

''சொல்லுங்க! என்ன சாலரி எதிர்பார்க்கிறீங்க'' என்றாள்.

''மேடம்! சாலரி நாட் எ பிராப்ளனெல்லாம் சொல்ல மாட்டேன். முப்பதாயிரம் ரூபாய் சாலரி குடுத்துருங்க. அப்பப்ப லீவு கேட்டா குடுக்கணும். முக்கியமா சண்டே எனக்கு லீவு குடுக்கணும். எங்கே போறேன் வர்றேன்னு எதுவும் கேட்கக் கூடாது'' என்றான்.

''சண்டேஸ்ல நீங்க எங்க போனா எனக்கென்னங்க சார்... நோ பிராப்ளம்'' என்றாள்.

''மேடம்! லேடீஸ்க்குக் கீழே வேலை செய்றதெல்லாம் எனக்கு அவ்வளவா பிடிக்காத விஷயம். பெரியப்பா ஆர்டர் போட்டதுனால இதுல இறங்குகிறேன். நாங்க வசதி குறைஞ்சவங்கதான். ஆனால் சுயமரியாதைக்காரங்க. பட்... வேலையில எந்தக் குறையும் வைக்க மாட்டேன். சண்டே ஒருநாளைத் தவிர மத்த நாட்களெல்லாம் ட்வெண்டி போர் ஹவர்ஸ் ட்யூட்டி நீ தான் பாதுகாப்புன்னு பெரியப்பா சொல்லியிருக்காங்க.''

''ஓ! எல்லாத்தையும் அங்கிள் சொல்லிட்டாங்களா'' என்று புன்னகைத்துக் கொண்டாள் கவிப்பிரியா.

''வாங்க'' என்று உள்ளே பங்களாவுக்கு அழைத்துப் போனாள். எல்லாரிடமும் அறிமுகப் படுத்தினாள்.

ராமபத்ரன் அலுவலகத்தில் உள்ளே அமர்ந்திருந்தார். அவரிடமும் அறிமுகப்படுத்தினாள்.



சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு கவிப்பிரியாவிடம் சொன்னார்.

''எம்மா. இனியென்னம்மா. என்னை விட்டுட வேண்டியதுதானே?'' என்று சிரித்தார்.

''சார். ஒரு மாசம் பொறுங்க. ஓரளவுக்கு எனக்கு வழி காட்டிட்டு அப்புறம் நீங்க போகலாம்'' என்று வேண்டிக் கொண்டான்.

''சரிப்பா இருக்கேன்,'' என்று மிக எளிதாக ஒத்துக் கொண்டார்.

''நீயும் என்னோட கெஸ்ட் ஹவுஸிலேயே தங்கிக்கலாமே'' என்றார் ராமபத்ரன்.

''ஆமா! நீங்க மாடியில தங்கிக்குங்க. அங்கிள் கீழே தங்கிக்கட்டும்'' என்றாள் கவிப்பிரியா.

அப்படியே ஏற்பாடானது.

* * *

''மேடம்! குட்மார்னிங்! சங்கர் ஹியர்.'' என்று போன் வந்தது.

''குட்மார்னிங்! சொல்லுங்க மிஸ்டர் சங்கர்!'' என்றாள் உற்சாகமாக.

''மேடம்! ஒரு ஒன்பது மணிக்குக் கிளம்பலாமா?'' என்று கேட்டான்.

''எங்கே?''

''மெயின் ஆபீசுக்கு...''

''ஏன் ராமபத்ரன் இருக்காரே?''

''மேடம்! அங்கிள் ஒரே மாதத்துல ரிலீஸ் ஆகப் போறாரே? அதுக்குள்ளே தொழிலை நடத்த நாம தயாராக வேண்டாமா?'' என்றான்.

''ஓ! இப்ப ரெடியாகறேன்'' என்றாள்.

சரியாக எட்டு ஐம்பத்தைந்துக்கு அவள் கீழே இறங்கி வந்தபோது அவன் தயாராக நின்றிருந்தான்.

காரின் முன் சீட்டில் ஏறிக் கொண்டான்.

''மேடம்! அந்த பம்ப் செட் கம்பெனிக்குப் போலாமா?'' என்றான்.

போனார்கள்.

ஒன்பது மணிக்கே கவிப்பிரியாவின் கார் உள்ளே நுழைவதைப் பார்த்த ஊழியர்கள் அங்கங்கே நின்று கொண்டிருந்தவர்கள் உஷாராவதைக் கவனித்தான்.

புன்னகைத்துக் கொண்டான்.

கவிப்பிரியா கம்பீரமாக இறங்கி உள்ளே நடக்க அவன் பைலைக் கையில் வைத்துக் கொண்டு அவள் பின்னால் பவ்யமாக நடந்து வந்தான்.

உள்ளே ஒரு விதமான எதிர்பார்ப்புடன் நடந்து வந்தாள்.

''மேடம். எவ்வளவுக்கெவ்வளவு முகத்தை இறுக்கமாக வைத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு வச்சக்குங்க'' என்றான்.

கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. வணக்கம் சொல்பவர்களுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டு வந்தாள்.

அவனும் தொடர்ந்தான்.

முழுவதுமாக ஒரு ரவுண்ட் அடித்து விட்டு வரும் போது அந்தக் கம்பெனியின் ஜி.எம். கூட வந்து விளக்கமாக எல்லாவற்றையும் சொன்னார்.



அவளது அறையில் போய் அமர்ந்தாள்.

''உட்காருங்க. சங்கர்.'' என்றாள்.

''இருங்க மேடம்! நான் உங்க பர்ஸனல் பி.ஏ. அப்படியெல்லாம் உங்க எதிரே உட்காரக் கூடாது'' என்று முணுமுணுப்பாகச் சொன்னான்.

அவளும் விட்டு விட்டாள்.

''மேடம்! அக்கவுண்ட்ஸ் சம்பந்தப்பட்ட பைல்ஸ் எல்லாம் கேளுங்க. ஜர்னல் லெட்ஜர் எல்லாம் கேளுங்க. எல்லாத்தையும் வீட்டுக்குக் கொண்டு போய்ப் பார்த்துர்லாம்'' என்றான்.

கேட்டாள்!

கொடுத்தார்கள்.

''இந்த மாச டார்கெட் எவ்வளவு? மார்க்கெட்டிங் எப்படிப் போயிட்டிருக்கு?'' என்று பொதுப்படையாகக் கேட்டுக் கொண்டாள்.

புறப்பட்டார்கள்!

காரில் ஏறுவதற்கு முன்பாக சங்கர் ஜி.எம்மிடம் சொன்னான்.

''சார். மேடம் இனிமே தினம் வருவாங்க. எந்த நேரத்தில் வேண்ணா வருவாங்க'' என்று புன்னகைத்தான்.

ஜி.எம். தலையை உருட்டினார். ''தாராளமா வரட்டும் மேடம் எப்ப இப்படி வந்து பாப்பாங்கன்னுதான் எதி பார்த்துகிட்டிருக்கோம்'' என்றார்.

''தட்ஸ் குட்'' என்றான்.

கார் நகர்ந்தது.

ஜி.எம். சற்று நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததை காரின் பக்க வாட்டுக் கண்ணாடியில் பார்த்த சங்கர் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

அடுத்ததாக ஸ்டேஷனரி ஸ்டோருக்குப் போனார்கள். போவதற்கு முன்பாக சில விஷயங்களை அவளிடம் பேசினான்.

கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் இருந்து ஆய்வு செய்தார்கள்.

மிகச் சிறிய தவறுகளைத் தவிர அங்கே பெரிதாக எதுவும் கண்டு பிடிக்கப் படவில்லை.

அங்கிருந்து வெளியே வந்த போதே மாலை மணி ஆறாகி விட்டது.

கொஞ்சம் களைப்பாக உணர்ந்தார்கள்.

காரில் இருந்து இறங்கியவுடன் அவனே சோம்பல் முறித்தான்.

"மேடம்.. இன்னைக்கு இது போதும்" என்றான்.

அவளும் புன்னகைத்தாள்.

இருவரும் அலுவலக அறைக்குப் போனார்கள்.

ராமபத்ரன் சிரித்தார். "என்னப்பா தம்பி பேப்பர் பண்டில் எல்லாம் எண்ணிப் பாத்தீங்களா?" என்றார்.

"ஆமா சார்! எல்லாத்தையும் ஒரு கலக்கு கலக்கிட்டேன்." என்றான்.



"அம்மா இது நிர்வாகத்துல முதல் பாடம். எதெது எங்கெங்கே எவ்வளவு இருக்குன்னு தெரிஞ்சிருக்கறது. நமக்கு எல்லாத்தையும் பத்தி தரோவா தெரியும்னாலே பாதிக் குற்றங்கள் குறைஞ்சுடும்... இப்பவே எனக்கு அங்கங்க இருந்து போன். "என்ன சார்! மேடமே இறங்கிட்டாங்க போல இருக்கு அப்படீன்னு. இனிமே எல்லாரும் அலர்ட்டாயிருவாங்க பாரு." என்றார்.

அவள் மௌனமாக உள்வாங்கிக் கொண்டாள்.

"ஒரு டைம் டேபிள் போடுங்க மேடம்! ஆனா அது உங்களுக்கு மட்டும்தான் தெரியணும். எப்ப எங்கே விசிட் வருவாங்களோ அப்படீங்கற பயத்துல இருந்தாலே போதும். ஆனா ஒழுங்கா வேலை செய்யற இடம் எதுன்னு தெரிஞ்சு அங்க லேசான மேற்பார்வை செஞ்சாப் போதும். ஒழுங்கா வேலை நடக்கற இடங்கள்லே பாராட்டிகிட்டிருந்தா போதும். அங்க போய் அடிக்கடி மிரட்டி டார்ச்சர் குடுக்கக் கூடாது. வெக்ஸாயிடுவாங்க. வேலை செய்யறவங்களைத் தட்டிக் கொடுக்கணும். வேலை செய்யாதவங்களை தட்டிக் கேட்கணும்."

"ம்" என்று பாடம் கேட்டுக் கொண்டாள்.

"மேடம் எல்லாக் கணக்குகளையும் கம்ப்யூட்டர்ல பீட் பண்ணுங்க. எல்லாக் கணக்குகளும் இங்கே நம்மகிட்டயும் இருக்கணும். அப்புறம் அப்பப்ப அப்டேட் பண்ணிக்கணும்" என்றான்.

அவன் கூறுவதை லயித்துக் கேட்டவள் அப்போதே திட்டமிட ஆரம்பித்தாள்.

ஒவ்வொரு அலுவலகத்துக்கும் எவ்வளவு கம்ப்யூட்டர் தேவையிருக்கும் என்று உடனடியாக அதற்கான ஏற்பாடுகளில் இறங்கினாள்.

''மேடம்! எங்களுக்கும் கொஞ்ச நேரம் குடுங்க'' என்று சிரித்த அவன் ''கெஸ்ட் ஹவுஸ் போகலாமா? அனுமதி யுண்டா?'' என்றான்.

அவள் முகம் சிவந்தது. ''ஓ! சாரி. சாரி. தாங்க்யூ சங்கர் சார்!'' என்றாள். அவன் புறப்படும்போது ராமபத்ரனும் புறப்பட்டார்.

தன்னுடைய அறைக்குப் போனவுடனே அவளுக்குத் தோன்றியது. ஏதோ உருப்படியாக வேலை செய்த மாதிரி இருந்தது.

எங்கிருந்து ஆரம்பிப்பது. எதைப் பார்ப்பது என்ற குழப்பம் இருந்து கொண்டே இருந்தது. இப்போது சரியான கோணத்தில் ஆரம்பம் செய்த மாதிரி இருந்தது.

இன்னமும் கார் ஏஜென்ஸி விஷயம்தான் பாக்கி இருந்தது.

நல்ல வேளையாக எல்லா நிறுவனங்களிலும் நம் பிக்கைக்குரிய ஜெனரல் மானேஜர்கள் இருப்பதாக அவள் நம்பிக் கொண்டிருந்தாள்.

ஒன்பது மணிவாக்கில் கனகசுந்தரத்திடம் இருந்து போன் வந்தது.

''என்னம்மா! புதுப் பையன் பரவாயில்லையா?'' ன்றார்.

''பரவாயில்லையேவா? என்னமோ எங்க இருந்து ரம்பிக்கறதுன்னு முழிச்சகிட்டிருந்தேன். இப்பத்தான் தோ உருப்படியா ஆரம்பிச்ச மாதிரி இருக்கு'' ''ஏன் ராம ரன் இருந்தாரே?''



''அப்பா போனதுக்கப்புறம் அவர் வந்துதான் ஏதோ இருந்ததை அப்படியே ஓட்டினார். என்ன இருந்தாலும் வயசானவரை ரொம்பத் தொந்தரவு செய்யறமோன்னு இருந்தது. இப்ப சங்கர் வரவும் இவருக்கே கொஞ்சம் ரிலீஃப் ஆன மாதிரி இருக்கு. அங்கிள் நீங்களே எல் லாத்தையும் வாங்கிக்குங்களேன்'' என்றாள்.

''பாக்கலாம்மா. கவலைப்படாம இரு. ஏதோ ஒண்ணு செய்யலாம். பார்ட்னர் ஷிப் போட்டு நானே மேனேஜ் மெண்ட் பார்க்க முடியுமான்னு பார்க்கறேன்'' என்றார்.

இப்போதைக்கு அந்த செய்தியே அவளுக்குத் தேனாக இனித்தது.

''அப்பாடா! - இதுவே எனக்குத் தெம்பா இருக்கு. அங்கிள்... இந்த சங்கர் உங்களுக்கு உறவாமே?'' என்றாள்.

''ஆமம்மா! தம்பி மகனாகணும்.''

''அங்கிள் உங்க சன்ஸ் ரெண்டு பேரும் நல்லா இருக்காங்களா?'' என்று கேட்டாள்.

''நல்லா இருக்காங்கம்மா. பெரியவன் டாக்டரா பிராக் டீஸ் பண்ணிகிட்டிருக்கான். சின்னதுக்கு பிஸினஸ் மூளை. எல்லாம் நல்லாப் போயிட்டிருக்கும்மா'' என்றார்.

''ஓ!''

''எனக்குத்தான் இந்தியாவுக்கு வந்துரணும் போல இருக்கு. பாக்கலாம். இந்த சங்கரை ஒரு சர்வே செய்யச் சொல்லி இருக்கேன். நிலைமை சீரானா நானே இந்தியா வந்தர்றேன். என் காலம் வரைக்கும் உனக்குத் துணையா இருக்கேன்.''

அவள் கலகலவென்ச் சிரித்தாள்.

''அங்கிள் அப்பா போனதுல இருந்து அந்தக் கற்பகம்மா தொல்லையையும் மீறி இன்னைக்குத்தான் சந்தோஷமா இருக்கேன். நீங்களும் இந்தியா வந்துட்டீங்கன்னா.. ஐயோ! எவ்வளவு நல்லா இருக்கும்'' என்றாள் குதூகல மாக.

''பார்க்கலாம். நீ எதுக்கும் கவலைப்படாதே. உடம்பைப் பார்த்துக்க.'' என்றார்.

''ஆனா அங்கிள் இந்த சங்கர் கொஞ்சம் சுயமரியாதைக் காரரா இருப்பார் போல இருக்கு. மேடம் நான் வசதி யில்லாதவன்தான். ஆனா சுயமரியாதை உள்ளவன் கறாரு.'' என்றாள்.

''ஆமம்மா. கிறுக்குப் பையன். இடம் தெரிஞ்சு நடந்துக்குவான். ஆனா கோபம் வந்துட்டா திடீர்னு மூட்டையைக் கட்டிட்டுக் கிளம்பிடுவான்'' என்றார்.

''ஓ!''

''பயப்படாதம்மா! உன் விஷயத்துல அப்படி நடக்காது. ஏன்னா அப்படிப் பாதியில கழண்டுட்டு வந்தா என் முகத்துல முழிக்க முடியாதுன்னு அவனுக்குத் தெரியும். இனிமே எந்த ஹெல்ப்பும் கிடைக்காதுன்னு அவனுக்குத தெரியும்'' என்றார்.

அவள் நிம்மதியடைந்தாள்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு போனை வைக்கும்போது பல நாட்களுக்குப் பிறகு அன்றைக்குத்தான் அங்கிள் தன்னைப் பாதுகாப்பதாக உறுதி கூறினாற் போல் உணர்ந்தாள்.





# 3

''நான் ஏமாந்துட்டண்டி பாலா! அவரு பேரு கெட்டறக் கூடாதுங்கறதுக்காக.. நான் பொறுத்துப் போனேன். இந்தக் கவியோட அம்மா மனசு கெட்றக் கூடாதுங்கறதுக்காக.. நான் தியாகம் செஞ்சேன். அவமானத் தீயில் வெந்தேன். அன்னைக்கே நாலு பேருக்கு முன்னால தாலியைக் கட்டுங்கன்னு சொல்லியிருந்தா எனக்கு இந்த அவமானம் வந்திருக்குமா? இன்னைக்கு என் நிலைமை இப்படி ஆகியிருக்குமா? கோயில்ல வச்சு சாமிக்கு முன்னாலே மாலை மாத்தினேனே! அதுக்கு மேல என்ன சாட்சி வேணும்னு கேட்டாரு? நம்பினேன். ஆனா இன்னைக்கு இன்னொருத்தி பெத்த பொண்ணுகிட்டே அஞ்சுக்கும் பத்துக்கும் கையேந்தி நிக்கறேன்'' என்று சொல்லிக் கொண்டு இல்லையில்லை புலம்பிக் கொண்டிருந்தாள் கற்பகவல்லி.

நன்றாகக் காதில் விழுந்தது கவிப் பிரியாவுக்கு. வேண்டு மென்றே காதில் விழ வேண்டுமென்றே பேசுகிறார் என் புரிந்தது.

மௌனமாக ஒரு வேதனைப் பெருமூச்சு விட்டாள்.

''உன்னால முடிஞ்சதைப் பாத்துக்கம்மா''ன்னு சொ லிடலாமா என்று யோசித்தாள்.

சொல்லிட்டா! அந்தம்மா நாலு பேருகிட்ட பே அப்பாவைப் பத்தி அவதூறாப் பேசிகிட்டுத் திரிய

செத்துப் போனதுக்கப்புறமும் இந்தம்மாவால அப்பா நாலு பேரு வாயில விழணுமா என்ன? வேண்டாம் என்று முடிவெடுத்துக் கொண்டாள்.

சங்கரிடம் பேசுவோமா? வேண்டாம். அதான் அங்கிள் பாத்துக்கறேன்னு சொல்லியிருக்காரே! எதுக்கும் அடுத்த வாரத்துல ஞாபகப் படுத்துவோம் என்று எண்ணிக் கொண்டே அலுவலக அறைக்குப் போனாள்.

சரியாக ஒன்பதரை மணிக்கு சங்கர் நுழைந்தான். ''குட்மார்னிங் மேடம்!'' என்றான் உற்சாகமாக.

''மேடம். காலையில உட்கார்ந்து இந்தக் கணக்கு வழக்குகளைப் பார்த்தேன். எல்லாம் சரியாவே இருக்கு. ஆனா ஒரு இருபத்தைந்தாயிரம் மட்டும். செலவுக் கணக்குக் காட்டியிருக்காங்க... அதுக்கு சரியான வவுச்சர்ஸ் இல்லே. மேடம்! அந்த ஜி.எம். ஓ.கே.தான். அதனால் ரொம்பக் கிளறிக் கேட்க வேண்டாம். ஆனா கேக்கலேன்னும் வேண்டாம். என்ன விளக்கம் சொல்றாருன்னு மட்டும் கேட்டுக்குங்க'' என்றான்.

''உட்காருங்க ப்ளீஸ்.'' என்றாள்.

''மேடம். இங்க உட்கார்றேன். அங்கயெல்லாம் வந்தா உட்காரச் சொல்லாதீங்க'' என்றான்.

அவன் முன்னால் பைல்களை எடுத்துக் கடை பரப்பினாள்.

இதுவரை அப்படி பைல்களைப் பார்த்தாலே அவளுக்குத் தலை சுற்றுகிறாற் போல் இருக்கும். ஆனால் இப்போது அப்படியெல்லாம் தோன்றவேயில்லையென்பது அவளுக்கே ஆச்சரியம்தான். ''சொல்லுங்க'' என்றாள் உற்சாகமாக.



''மேடம். இது டர்ன் ஓவர். இது நெட் ப்ராஃபிட். இது செலவு கணக்கு'' என்று அவளுக்குப் புரிகிற மாதிரி விளக்கினான்.

''மேடம். இதெல்லாம் வீக்லி ஒன்ஸ் பாத்துருங்க.. முதல் தடவை பாக்கறதுதான் கஷ்டமா இருக்கும். அப்புறம் அப்பப்ப அப்டேட் பண்றதுதானே? ஈஸியா ஆயிடும்'' என்றான்.

''சரிங்க'' என்றாள்.

அப்புறம் நாள் முழுதும் அமர்ந்து அந்தக் கம்பெனியின் கணக்கு வழக்குகளைப் பார்க்க சொல்லிக் கொடுத்தான்.

''மேடம். ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கற இடங்களோட நீங்க நேரடித் தொடர்பு வச்சுக்குங்க. ஏன்னா இடையில ஏதாவது கமிஷன் வாங்கற வேலை நடக்கலாம். அதைவிட அந்தக் கமிஷனை ஈடு கட்ட அவங்க பொருளோட தரத்துல கையை வச்சர்லாம்'' என்றான்.

''இல்லல்லே! நாம ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கற இடமெல்லாம் நல்ல நேர்மையான கம்பெனிகள்தான். விலையில ஸ்ட்ரிக்டா இருப்பாங்க. பொருளோட தரத்துலயும் எந்த வித காம்ப்ரமைஸூம் பண்ணிக்க மாட்டாங்க.''

''தட்ஸ் ரியலி குட். அப்படித்தான் பெரியப்பாவும் சொன்னாங்க. ராமபத்ரன் அங்கிளும் சொன்னாங்க.''

எல்லாரையும் விசாரித்து விட்டுத்தான் தன்னையும் ஆழம் பார்த்திருக்கிறான் என்பது புரிந்தது. உள்ளுக்குள் புன்னகைத்துக் கொண்டாள்.

''அது சரி. ராமபத்ரன் அங்கிள் எங்கே?'' என்றாள்.

''ஓ! சாரி மேடம்! நான் சொல்ல மறந்துட்டேன். கார் ஏஜென்ஸியோட கணக்கு வழக்கெல்லாம் நான் ஒரு ரவுண்ட் பார்த்தர்றேன். அதுக்கப்புறம் கவிதா மேடம் வந்துரட்டும்ன்னு சொல்லிட்டுப் போனாரு. நான் சொல்ல மறந்துட்டேன்'' என்றான் மன்னிப்பு வேண்டும் குரலில்.

''பரவாயில்லை'' என்றாள் புன்னகையுடன். ஆனால் உள்ளுக்குள் மகிழ்ந்து போனாள். வந்த இரண்டு நாட்களுக்குள் எல்லா இடங்களிலும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தான் என்பது புரிந்தது.

அவள் முகபாவம் பார்த்து அவன் முகத்திலும் புன்னகை மலர்ந்தது.

''அவ்வளவுதான் மேடம். விஷயம்! எல்லா இடத்திலும் மேற்பார்வை இருக்குன்னு தெரிஞ்சாலே விஷயங்கள்ல ஒரு ஒழுங்கு வந்துரும். ஆனா நாம சலிப்பில்லாம மேற்பார்வை பாக்கணும்'' என்றான்.

அவள் மிகவும் லயித்துப் போனவளாய் அவன் வாயைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

''அது மட்டும் இல்ல மேடம்! எல்லா இடத்துலயும் நமக்கு நம்பிக்கையானவங்க கொஞ்ச பேராவது வச்சுக்கணும்... எங்கயாவது, ஏதாவது தப்பாப் போனா அங்கங்கயிருந்து நமக்குத் தகவல் வந்துரும்.''

''அதுதான் பிரச்சினையே. யாரை நம்பறது. யாரை நம்ப வேண்டாங்கறதுன்னே தெரியலை.'' என்றாள்.

அவன் சிரித்தான். ''அது கொஞ்சம் கஷ்டமான விஷயம் தான். இன்னும் மனிதர்கள் பேசறதை வச்சோ அவர்களின்



வெளிப்படையான நடத்தையை வச்சோ எதையும் கண்டு பிடிக்க முடியறதில்லை'' என்றான்.

''ஆமா. அதிலயும் ஏதாவது ஒரு கம்பெனி மட்டுமா இருந்தா பரவாயில்லை. ரெண்டு மூணு கன்ஸர்ன்ஸ் அப்படிங்கும்போது எதையும் கண்டு பிடிக்க முடியறதில்லை. அதனால முழுசா எதையும் புரிஞ்சுக்க முடியறதில்லை.''

''நாச்சுரல். அதுலயும் புதுசா மேனேஜ்மென்ட்ல நுழையும்போது கஷ்டம்தான். கவலைப்படாதீங்க மேடம்..! நீங்க ரொம்ப ஷார்ப். பாருங்க. ரெண்டே மாசத்துல நீ கொஞ்சம் அந்தப் பக்கம் நில்றான்னுட்டு நீங்களே போடு போடுன்னு போடுவீங்க பாருங்க'' என்றான்.

''ஐயய்யோ நிச்சயமா அப்படியெல்லாம் நடக்காது.''

அவன் புரியாமல் பார்த்தான்.

''அந்தப் பக்கம் நில்றான்னெல்லாம் சொல்ல மாட்டேன். நில்லுங்கன்னு வேண்ணா சொல்லுவேன்.''

''நீங்க அப்படி வர்றீங்களா!'' என்று சிரித்தான்.

''மேடம்! நான் சொல்லிக் கொடுத்த மெத்தட்ல இந்தக் கணக்கு வழக்கையெல்லாம் பாருங்க. அதுக்குள்ள அங்க பாக்டரியில என்ன செய்யறாங்கன்னு ஒரு ரவுண்ட் பாத்துட்டு வந்தர்றேன்.''

''செய்ங்க'' என்றாள்.

''மேடம். நம்ம பங்களாவில வேலை செய்யறவங்க யார் யாருக்கு.. எத்தனை சம்பளம் கொடுக்கறீங்க. கணக்கு வச்சுக்கறீங்களா?'' என்றான்.

''இல்லையே. அதுக்கெல்லாம் தனியா கணக்கு வச்சுக்கறதில்லையே!'' என்றாள்.

''மேடம். இங்க எத்தனை பேர் வேலை செய்யறாங்க?''

''இங்க பத்து பேருக்கு மேல வேலை செய்யறாங்க. டிரைவர் கணக்கு பம்ப் செட் கம்பெனியில வந்துரும். பி.எஃப். கூட உண்டு. மத்தவங்களுக்கு எல்லாம் அப்பப்ப என் பர்ஸனல் அக்கவுண்ட்ல இருந்து சம்பளம் கொடுத்தர்றதுதான்'' என்றாள்.

''மேடம். எதுக்கும் ரெஜிஸ்டர் மெயின்டெய்ன் பண்ணுங்க. அப்பத்தான் எது தேவையில்லாத செலவு. தேவையான செலவுன்னு நமக்கும் புரியும். ஆஹா. இத்தனை செலவு ஆகுதான்னு தோணும்போதுதான் நமக்கும் அதைக் குறைக்கணும்கற எண்ணமும் தோணும்.''

''அது சரிங்க சார். அதுக்காக வேலைக்காரங்க வயித்துல அடிக்கணுமா சார்?''

''கண்டிப்பா அப்படிச் செய்யக் கூடாது மேடம். ஆனா ஒரு விஷயம் புரிஞ்சுக்குங்க. ஒழுங்கா வேலை செய்யறவங்க யார் பார்த்தாலும் பார்க்காட்டியும் நல்லா செய்வாங்க. மேற்பார்வை பாத்தா ஒழுங்கா செய்யறவங்க இன்னொரு கேட்டிகரி. ஆனா வேலை செய்யாதவங்க கண்ணுல விளக்கெண்ணெய் விட்டுட்டுப் பார்த்தாலும் ஏமாத்திடுவாங்க. அது இன்னொரு கேட்டிகரி. இந்த மூன்றாவது கேட்டகரியைத்தான் ரொம்ப கேர்ஃபுல்லா கவனிக்கணும். அதுக்கு உதவியா இருக்கறது கணக்கு வழக்குகள்தான்.''

''தட்ஸ் ட்ரு'' என்றாள்.

''மேடம். என் ஃபிரண்டு ஒருத்தன் ஒரு விஷயம் சொன்னான். கேளுங்க... ஒரு கம்ப்யூட்டர் வாங்கும்போது அது முப்பத்தைந்தாயிரம். வாங்கி நாலு வருஷம்



இருக்கும். இப்ப அதை ரீ சேல் செஞ்சா அது ஆறாயிரம் ரூபாய்க்குப் போகும். ஆனா அப்படி விக்கறதுக்கு முன்னால அந்த முப்பத்தைந்தாயிரத்தை ஈடு கட்டற மாதிரி என்னென்ன செஞ்சிருக்கோம். எப்படியெப்படிப் பயன்படுத்தியிருக்கோம்னு யோசிக்கணுமாம். அப்பத்தான் அந்தக் கம்ப்யூட்டர் வாங்கினதுல ஒரு அர்த்தம் இருக்குமாம்'' என்றான்.

அவள் குபீரென்று சிரித்தாள். ''சங்கர். உங்களுக்கு மேல இருப்பாரு போல இருக்கு உங்க ஃபிரண்டு'' என்றாள்.

மேலும் தொடர்ந்து பேசினாள். ''அது சரி. இந்தப் பட்டுப் புடவை, வைர நெக்லஸ், நகை இதுலயெல்லாம் என்ன யூட்டிலிட்டி வேல்யூ இருக்கு?'' என்றாள்.

''அதெல்லாம் பிரஸ்டீஜ் வேல்யூவுக்காக மேடம்.. அதுல நகை கொஞ்சம் பரவாயில்லை. ஓரளவுக்கு முதலீடு செய்யலாம். தப்பில்லே. அதுவும் பெண்களுக்கு சொத்தில பங்கு இல்லேங்கறப்ப ஒரு பாதுகாப்புக்காகப் போட்டது.''

அவள் சிந்தனையுடன் அவனைப் பார்த்தாள். ''சார், இவ்வளவு தூரம் யோசிக்கிறீங்க. ஏன் நீங்களே ஒரு முதலாளியாகலை?''

அவன் பெருமூச்சு விட்டான். ''அதுக்கெல்லாம் ஒரு யோகம் வேணும் மேடம். குடும்ப சூழ்நிலை அப்படி. ஏதோ பெரியப்பா சப்போர்ட்ல கௌரவமா ஓடுது'' என்றவன் சட்டென்று எழுந்தான்.

''சரிங்க மேடம்! நான் சொன்ன மெத்தட்ல இந்தக் கணக்கு வழக்குகளைப் பாருங்க'' என்றான். அந்தப் புறம் நகர்ந்தான்.

அறையை விட்டு வெளியே வந்தவன் கற்பகம் வேகமாக நகர்ந்து சென்றது கண்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

அதே சமயம்!

கணக்கு வழக்குகளை ஆர்வமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்த கவிப்பிரியா,

கம்ப்யூட்டரில் இருந்த கணக்குகளையும் ஏடுகளில் இருந்த கணக்குகளையும் ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பித் தவள் சற்று நேரத்தில் அதில் ஆழ்ந்து போனாள்.

ஆர்வமாகக் கூட ஆகி விட்டது.

பிற்பகல் இரண்டு மணிக்குத்தான் எழுந்தாள்.

அவன் வெளியே வந்தபோது அவன் தனது கெஸ்ட் ஹவுஸுக்கு சாப்பிடப் போய் விட்டதாகச் சொன்னார்கள்.

அவன் அங்கே அவர்களோடு அமர்ந்து சாப்பிடுவ தில்லை. அவனது அறைக்கு உணவு போய்விடும்.

வசதி போலப் பார்த்துக் கொண்டான்.

அவளும் வேலைக்காரர்களிடம் அவன் ஒரு பெரிய முதலாளியின் மகன். வேலை கற்றுக் கொடுப்பதற்காக வந்திருக்கிறான். அவனிடம் மிகவும் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டுமென்று சொல்லியிருந்தாள். சொல்லியிருப்பதென்ன? உத்தரவே போட்டிருந்தாள்.

வந்த இந்த நான்கு நாட்களில் கவனித்திருந்தாள். சரியாக ஒரு மணிக்கு கிளம்பிப் போய்விடுவான். இரண் டரை மணிக்குத்தான் வருவான்.

வந்தால் மாலையில் எவ்வளவு நேரமானாலும் ''நீங்க போங்க சார்!'' என்று அவளாகச் சொல்லும் வரையில்



போக மாட்டான். ஆனால் அவளும் பெரும்பாலும் ஆறு மணிக்கு மேல் அவனை இருக்கச் சொல்வதில்லை.

அதற்குப் பிறகு அவன் சில நேரங்களில் வெளியே கிளம்பி விடுவான். அவனுக்கென்று ஒரு மாருதி கொடுத் திருந்தாள்.

வெளியே போகணும் மேடம் என்று சொல்லி விட்டுப் போவான். எங்கே போகிறீர்கள் என்று அவளும் கேட்க மாட்டாள்.

அவனும் சொல்ல மாட்டான்.

அன்றைக்கு தனது அறைக்குப் போனவள் சற்று நேரம் உறங்கி விட்டாள்.

மூன்று மணிக்கு இறங்கி வந்தபோது அலுவலக அறை பரபரப்பாக இருந்தது.

இரண்டு மூன்று கம்ப்யூட்டர்கள் பொருத்திக் கொண் டிருந்தார்கள்.

அவனது டேபிளில் ஒன்று!

அவளது டேபிளில் ஒன்று!

ராமபத்ரன் டேபிளில் ஒன்று. அது தவிர இரண்டு மேஜைகள் போடப்பட்டன. ''எதற்கு?'' என்றாள்.

''மேடம் அக்கவுண்ட்ஸ் பாக்கறதுக்கு ஒருத்தர். எஸ்டாப்ளிஷ்மென்ட் பாக்கறதுக்குன்னு ஒருத்தர் ரெண்டு பேர் அப்பாயிண்ட் பண்ணணும். ஹவுஸ்கீப்பிங் செலவு கள் எல்லாத்தையும் கணக்கில் கொண்டு வரணும். எல் லாத்தையும் கம்ப்யூட்டரைஸ் செய்யணும்.''

''எல்லாத்தையும் கம்ப்யூட்டரைஸ் செய்யணுமா?''

''மேடம்! எனக்கு இதுக்கு பதில் சொல்லுங்க. நீங்க என்ன டாக்ஸ் பேயரா? இல்லை டாக்ஸை ஏமாத்தனும்னு நினைக்கறவரா?''

''சேச்சே! டாக்ஸை எப்பவும் ஒழுங்கா பே பண்ணிட்டம்னா யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லே.''

''தட்ஸ் குட்! அப்ப எல்லாக் கணக்குகளையும் கம்ப்யூட்டரைஸ் பண்ணிடலாம்'' என்றான். ஒரே வாரத்தில் அலுவலகம் களை கட்டி விட்டது.

அவள் எப்படியும் ரெண்டு மூன்று நாட்களுக்குள்ளாவது எல்லா அலுவலகங்களையும் மாற்றி மாற்றிப் பார்த்து வருவது வழக்கமானது.

எல்லா இடங்களிலும் ஒரு சுறுசுறுப்பு தெரிந்தது. அவளுக்குள்ளேயும் ஒரு சுறுசுறுப்பு ஏற்பட்டிருந்தது.

சரியாக ஒன்பதரை மணிக்கு அலுவலகம் வந்தாள். அவனும் கூட.

சொல்லப் போனால் ராமபத்ரன் பார்வையாளராக மாறிப் போனார்.

ஒவ்வொரு நாளும் கிளம்புவதற்கு முன்னால் ஃப்ளாப்பியில் அடுத்த நாளுக்கு அவள் செய்ய வேண்டிய செலுத்துகைகள் வர வேண்டிய தொகை பற்றிய விவரங்களைப் பதிந்து வைத்து விடுவான். அவள் வந்தவுடன் அதை ஒரு பார்வை பார்த்து அந்தந்த அலுவலகத்துக்கு போன் செய்து ''ஜி.எம். சார். இந்தப் பேமெண்ட் நாம செய்ய வேண்டியது. வர வேண்டியது என்று அதைப் பாத்துக்குங்க'' என்று அவள் நினைவு படுத்தும்போது அவர்கள் அசந்து போனார்கள்.



அதட்ட மாட்டாள்!

மென்மையாகச் சொல்வாள். ஆனால் ''மேடம் ஞாபகமாக் கேப்பாங்கப்பா. அதைப் பாருங்க'' என்று அவர்களும் சுறுசுறுப்பாவார்கள்.

''மேடம். கணக்குல நியாயமா இருக்க வேண்டியது அவசியம்தான். அதுக்காக கஞ்சத்தனம் செய்யாதீங்க. தொழிலாளிகளுக்குக் குடுக்க வேண்டியதை நியாயமாக் குடுங்க. நல்ல விதமா நடத்துங்க. அவங்களுக்கு நம்ம நிறுவனத்துல வேலை செய்யறதுல ஒரு நிம்மதி இருக்கணும். எப்படா பிச்சுகிட்டுப் போகலாம்னு அவங்க நிலை கொள்ளாம தவிக்கக் கூடாது என்று தனியாக இருக்கும் போது அவளிடம் கூறுவான். ஆனால் எந்த இடத்திலும் இத்தனைக்கும் பின்னணியில் தான் இருப்பதைக் காட்டிக் கொள்ள மாட்டான்.

தனது கம்பெனியில் யாராவது கேட்கும்போது உடனடியாக பதில் சொல்ல முடியாவிட்டால் கூட,

''ஜி.எம்.சார். டைம் குடுங்க சார். அதைப் பத்தி அப்புறம் சொல்றேன்னு சொல்லுங்க மேடம். அங்க வச்சு என்னைக் கேட்டீங்கன்னா அது உங்க கௌரவத்தைப் பாதிக்கும்.'' என்று யோசனை வேறு சொல்லியிருந்தான்.

அந்த ஞாயிற்றுக்கிழமை!

வெளியே போய் விட்டான்.

அவள் கனகசுந்தரத்துக்கு போன் செய்தாள்.

''அங்கிள். இப்படி ஒரு ஆளை இத்தனை நாள் ரிலீஸ் பண்ணாம எங்க வச்சிருந்தீங்க'' என்று கபகபவென்று சிரித்தாள்.

அவரும் சிரித்தார்.

''பரவாயில்லையே! பய நல்ல பேரு வாங்கிட்டானா?'' என்றார்.

''நல்ல பேரு வாங்கறதா? ஒரு மாதிரி சலிப்பிலிருந்த என்னையே சுறுசுறுப்பாக்கிட்டார்ன்னா பாருங்களேன்'' என்றாள்.

''குட் குட்'' என்றார் கனகசுந்தரம்.

இதையெல்லாம் கண்டும் காணாமல் கவனித்துக் கொண்டிருந்த கற்பகம்மாள் வயிற்றில் பெரிய கனலே மூண்டு தகித்துக் கொண்டிருந்தது என்பதை அவர்கள் அறியவேயில்லை.



# 4

''குட்மார்னிங் சார்!'' என்றாள் பாலா மெல்ல அறைக்குள் எட்டிப் பார்த்தபடி.

''வாங்க மேடம்.'' என்றான் சங்கர்.

''சார். மேடம் எல்லாம் இல்லை. ஏதோ அக்கா பார்த்து இங்கே தங்கறதுக்கு இடம் கொடுத்துருக்காங்க. அவ்வளவுதான்'' என்றாள்.

''எப்படியிருந்தாலும்.. உங்களுக்கு அக்காதானே? நீங்க நெருங்கிய உறவுக்காரங்க.. நாங்க என்ன இருந்தாலும் வேலைக்கு வந்தவங்கதானே?'' என்றான் சங்கர்.



''சார்! அப்படியெல்லாம் சொல்லாதீங்க! நீங்கதான் ரொம்ப சக்தியுள்ள ஆள்ன்னு எல்லாம் சொல்றாங்க. நீங்க என்ன சொன்னாலும் அக்கா கேட்பாங்களாம்.''

''அதெல்லாம் சும்மா! நான் கிணத்துல விழுன்னு சொன்னா விழுவாங்களா?'' என்று சிரித்தான்.

அதே நேரம்!

கவிப்பிரியா வந்தாள்.

''என்ன மிஸ்டர் சங்கர். காலையில ரொம்ப உற்சாகமா இருக்கீங்க..'' என்றாள்.

''மேடம்! ஒரு முக்கியமான ஆலோசனை.''

''என்ன ஆலோசனை?''

''நீங்க யார் சொன்னா கிணத்துல குதிப்பீங்கன்னுதான்'' என்றான்.

''வ்வாட்!'' என்று அதிர்ந்து போய் நின்றாள்.

''சும்மா. தமாஷுக்குச் சொன்னேன். இங்கே பாலா.. மேடம்.. எனக்கு ஏதோ இன்ஃப்ளுயன்ஸ் இருக்கற மாதிரி சொல்லிகிட்டிருந்தாங்க. நான் சொன்னேன்... அவங்க முதலாளி... நான் அவங்களுக்குக் கீழே சின்சியரா வேலை செய்ற வேலைக்காரன் அப்படீன்னு'' ஒரு கணம் திகைத்துப் போன கவிப்பிரியா சுதாரித்துக் கொண்டாள்.

''பாலா! இப்ப.. எதுக்கு வேலை நேரத்துல பேட்டி எடுத்துகிட்டிருக்கே..! ஏதாவது வேலை இருந்தா போய்ப் பாரு'' என்றாள் கோபத்தை அடக்கிக் கொண்டு.

பாலா முகம் வாடிப் போய் நகர்ந்தாள். திரும்பி சங்கரை பார்த்தாள்.

''சார்! அவங்க எனக்கு தூரத்து உறவு. பர்மனன்ட்டா இங்க இருக்கப் போறவங்களும் இல்லே. பெட்டர் கீப் டிஸ்டென்ஸ்'' என்றாள்.

''ஓ.கே. மேடம்'' என்றான் பணிவாக. அவள் சொல்லுவதை அந்தப் புறமாக நின்று பார்த்துக் கொண்டிருந்த கற்பகம்மா ஒருவிதக் குரோதப் பார்வையை வீசி விட்டுச் செல்லுவதை கவனித்து சங்கர் புன்னகைத்துக் கொண்டான்.

உடனே திரும்பி ''சரிங்க மேடம்! இப்ப நாம எந்தக் கம்பெனிக்குப் போறோம்!'' என்றான்.

''நீங்கதானே.. ஷெட்யூல் போடறீங்க. நீங்களே சொல்லுங்க'' என்றாள். சற்று முன்பு கோபமாகப் பேசியதற்கு ஈடு கட்டுவது போல் புன்னகைத்துக் கொண்டாள். அவனும் புன்னகைத்தான்!

சமையல்காரம்மாள் முத்தம்மாள் ஓடி வந்தாள். ''என்னடா சாமி! பால் சாப்பிடாம வந்துட்டே!'' என்று அங்கலாய்த்தார்.

''சும்மாயிருங்க. முத்தம்மா! நான் என்ன சின்னக் குழந்தையா? இந்த நேரத்துல என்ன பால்'' என்றாள் கவிப்பிரியா.

''இல்லடா சாமி. இப்பப் போனா... ரெண்டு மணியில்லாம வரமாட்ட! இடையிலயும் எதுவும் சாப்பிட மாட்டே. வேண்ணா வடை செய்து குடுத்தனுப்பட்டா'' என்றார் அக்கறையாக.

அவள் நின்றாள். முத்தம்மாவின் முகம் பார்த்தாள். தன் தாயார் போனதற்குப் பிறகு தன்னிடம் தாய்மை காட்டிய பெண்மணி என்பதால் அவளும் உரிமை கொடுப்பாள். அவரும் உரிமை எடுத்துக் கொள்வார்.



புன்னகைத்தாள்.

''பாருங்கம்மா! நான் அங்கங்கே கேண்டீன்ல.. ஏதாவது சாப்பிட்டுக்கறேன்... சரியா? நீங்க சாப்பிடாம இருக்கக் கூடாது'' என்றான்.

''சரி... நான் சாப்பிடறேன்! நீ இந்தப் பாலையாவது குடிம்மா.''

சங்கரைப் போன்ற இளைஞனை வைத்துக் கொண்டு முத்தம்மா.. இப்படிப் பிடிவாதம் பிடிப்பதைப் பார்த்து அவளுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அதனால் மேலும் பேச்சை வளர்த்தாமல் வாங்கிக் குடித்தாள்.

சங்கர் இங்கிதம் அறிந்து ஏதோ பைலை எடுப்பவன் போல் அந்தப் புறம் நகர்ந்தான்.

அவன் மீண்டும் திரும்பி வந்து போது ''சங்கர், நீங்க ஏதும் சாப்பிடறீங்களா?'' என்று உபசரித்தாள்.

அவன் குபீரென்று சிரித்தான்.

''ஐயோ! மேடம் பேசாம வாங்க. அப்புறம் ஒரு நாள் சாப்பிடலேன்னா முத்தம்மாப் பாட்டி எப்படி மிரட்டு வாங்கன்னு நினைச்சா இப்பவே பயமாயிருக்கு. வயிறு ஃபுல்.''

''ஏன் கண்ணு. இப்ப எந்த ஆபீசுக்கு?'' என்றார் முத்தம்மா.

''முதல்லே கார் ஏஜென்சி.''

தலையை ஆட்டி விட்டு நகர்ந்தார்கள். கார் இந்தப் பக்கம் கிளம்பியவுடனே கற்பகம்மாள் சமையல் அறைக்குள் எட்டிப் பார்த்தார்.

முத்தம்மாள் அப்போதுதான் சாப்பிட அமர்ந்தார்.

"எங்க முத்தம்மாக்கா! பாப்பா என்ன சாப்பிடவே மாட்டேங்குது" என்று சொல்லிக் கொண்டே அருகில் அமர்ந்தார்.

"அதையேன் கேக்கறீங்க... போங்க! சின்னப் பொண்ணா இருந்தப்ப... இருந்து இப்படித்தான். அதுக்கு சாப்பாடே முக்கியமாவே இருந்ததில்லை" என்று மிக உற்சாகமாக பேச ஆரம்பித்தார் முத்தம்மாள்.

ஒன்றிரண்டு நிமிஷங்கள் பேசிய கற்பகம்மாள் தனக்குத் தேவையான ஏதோ ஒரு விஷயம் தெரிந்து கொண்டாற்போல் ஒரு சிரிப்புடன் வெளியே வந்தார். நேராக டெலிபோனை நோக்கிப் போனார்.

* * *

புத்தம் புதிய கார்கள் வரிசையாக நின்றிருந்தன.

ஓட்டிக் காட்டுவதற்கான ஒரு இடம்... கொடுக்கல் வாங்கல் நடைபெறுவதற்கான ஒரு அலுவலகம் என்று எல்லாமே ஏ.சி. மயம்.

கவிப்பிரியா காரில் இருந்து இறங்கி.. பரபரவென்று நடந்தாள்.

கலெக்டருக்குப் பின்னால் நடக்கிற டவாலியைப் போல அவள் பின்னால் பைல்களைத் தூக்கிக் கொண்டு பவ்யமாக நடந்தான்.

அலுவலக அறைக்குள் நுழையும்போது கவனித்தான்.

எல்லாமும் அமைதியாக நடந்து கொண்டிருந்தது. சங்கரின் நெற்றி சுருங்கியது.

பழைய கார்களுக்கு சர்வீஸ். பழைய கார்களை ஒரு குறிப்பிட்ட விலையில் வாங்கிக் கொண்டு புதிய கார்கள் மாற்றித் தரும் எக்சேன்ஜ் என்று எல்லாமே செய்தார்கள்.



வீட்டிலிருந்து புறப்படும்போதே என்னென்ன கேட்க வேண்டுமென சொல்லிக் கொண்டு வந்திருந்தான்.

கடந்த இரண்டு மூன்று நாட்களாகவே அலுவலகங்களுக்கு மாற்றி மாற்றிச் சென்று வந்ததில் அவளுக்கு ஓரளவு விஷயங்களைப் புரிந்து கொண்டாள்.

நாளையிலிருந்து இரண்டு மூன்று நாட்களுக்கு இன்ஸ்பெக்ஷன் என்று அறிவித்திருந்தான்.

அன்று பிற்பகல் திரும்பி வரும்போது யோசனையிலேயே இருந்தான்.

"எனிதிங் இன்ட்ரஸ்டிங்?" என்று கேட்டாள்.

"மேடம். சம்திங் பிஷி. என்னவோ நாம வரப்போறதை முன்கூட்டியே எதிர்பார்த்த மாதிரி இருந்துச்சு."

"எதை வச்சுச் சொல்றீங்க?"

"இல்லே. நீங்க நுழைஞ்சவுடனே ஒரு பரபரப்பு இருக்கணுமில்லே? அதுவே இல்லை பாருங்க."

"நோ! அப்படித் தோணலே! மேடம் எப்ப வேண்ணா நுழைவாங்க அப்படீங்கற மென்டாலிட்டிக்குத் தயாராயிட்டாங்களோ என்னமோ!" என்றாள்.

"இல்லே. அப்படித் தோணலே!" என்றான் அவனும்.

"சரி விடுங்க. இதை எதுக்கு இவ்வளவு பெருசு பண்ணறீங்க" என்றாள்.

"விஷயம் இருக்கு!"

"என்ன விஷயம்?"

"சொல்றேன்.. டைம் வரும்போது.. சொல்றேன்" என்றான்.

அவளும் விட்டு விட்டாள்.

பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அடுத்த நாள் வேறொரு வேலை செய்தான்.

* * *

''ஏம்பபா! காரைத் திருப்பறே'' என்றாள் டிரைவரிடம்.

''மேடம்! நான்தான் காரைத் திருப்பச் சொன்னேன். இன்றைக்கு மறுபடியும் சர்ப்ரைஸா நாம கார் கம்பெனிக்கே போறோம்'' என்றான் சங்கர்.

மேற்கொண்டு அவள் எதுவும் கேட்கவில்லை.

காரை கேட்டிற்கு வெளியிலேயே நிறுத்தி விட்டு இறங்கி நடந்தார்கள்.

கவிப்பிரியா சற்றே அதிர்ந்து போனாள். நேற்றைக்கும் இன்றைக்கும் பெரிய வித்தியாசம் தெரிந்தது.

ஆங்காங்கே கும்பல் கும்பலாக நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு இடத்தில் ஒரு இளைஞன் டான்ஸ் ஆடிக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் நின்று பத்துப் பேருக்கு மேல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கவிப்பிரியாவுக்கே கோபம் வந்தது.

''என்ன நடக்குது இங்கே!'' என்று அவள் குரல் கொடுக்க சாவகாசமாய்த் திரும்பியவர்கள் அவள் நிற்பதைப் பார்த்துத் திகைத்துப் போனார்கள்.

அவள் கம்பீரமாய்த் திரும்பி சங்கரிடம் ''சார். இவங்க பேரை நோட் பண்ணுங்க'' என்றாள்.

மேனேஜரைத் தேடினாள்.



அவர் இன்னொரு மூலையிலிருந்து யாருடனோ ஜாலியாகப் பேசிக் கொண்டு வந்தவர் கவிப்பிரியாவைப் பார்த்தவுடன் தன் பங்குக்கு அதிர்ந்து போனார்.

வேகமாக ஓடி வந்தார்.

''இவங்க எல்லாத்தையும் பதினைந்து நாட்களுக்கு சஸ்பெண்ட் பண்ணுங்க'' என்றாள்.

''அங்கேயே ஒரு சேரைப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள். டைப் செய்து கொண்டு வரச் சொன்னாள்.

சங்கர் ஒரு விதமான புன்னகையுடன் சற்றே ஒதுங்கி நின்று கவனிக்க ஆரம்பித்தான்.

''மேனேஜர் சார்! இட்ஸ் ஒன்லி எ வார்னிங். இப்பக் கூட ஒரு மாசத்துக்கு சஸ்பெண்ட் பண்ணலே. வயித்துல அடிக்கக் கூடாதேன்னுதான்... ஒழுங்கா வேலை செய்யச் சொல்லுங்க.. நீங்களும் வேலை பாருங்க..'' என்றாள். எழுந்தாள். நடந்தாள்.

''மேடம். கும்பலாகக் கூடி நின்னுகிட்டுப் பேசறாங்க. என்னை என்ன பண்ணச் சொல்றீங்க'' என்று புலம்பிக் கொண்டே பின்னாலேயே வந்தார் மேனேஜர்.

''ஒண்ணும் சொல்ல வேண்டாம். மேடம் எப்ப வேண்ணா வருவாங்க. என்னை என்ன பண்ணச் சொல்றீங்க.. ஒழுங்கா வேலை பாருங்கப்பான்னு சொல்லுங்க'' என்றாள்.

கணக்கு வழக்குகளைப் பார்க்க ஆரம்பித்தாள்.

* * *

அன்றிரவு!

வெகுவாகக் களைப்பாக உணர்ந்தாள்! நாள் முழுக்க... கணக்கு.. வழக்கு பார்த்ததில் நிறைய தில்லு முல்லுகள் கண்டு பிடித்தார்கள்.

அதையெல்லாம் பற்றி விசாரித்து அதைச் சரி செய்வதற்கான அவகாசம் கொடுத்து என்று அவளும், ராமபத்ரனும், சங்கரும் ஆக அமர்ந்து பேசி முடிப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

அன்றைக்கு வரும்போது சங்கரிடம் கேட்டாள்.

''சங்கர் சார்! ஏன் காரை திடீர்னு திருப்பச் சொன்னீங்க'' என்று.

''மேடம்! நாங்க இந்தக் கம்பெனிக்கு வந்தப்ப மட்டும் முன் கூட்டியே தகவல் போயிட்ட மாதிரி என் மனசுக்குப் பட்டுது... அதான்.. அதான் திடீர்ன்னு போனா உள்ள நிலைமை தெரியும்னு நினைச்சேன்'' என்றான்.

''பாத்தீங்களா? எத்தனை தில்லு முல்லு நடக்குது'' என்றாள்.

''மேடம். மேனேஜர் உங்ககிட்டே ஏதோ சொன்னாரே?'' என்றான்.

அவள் முகம் வாடியது.

அவன் சட்டென்று சொன்னான்.

''பரவால்லைங்க மேடம்! சொல்லக் கஷ்டமா இருந்தா சொல்லாதீங்க'' என்றான்.

''மேடம்! நான்தான்ப்பா பாப்பாவோட சித்தி பேசறேன். அவசரச் செலவுக்கு ஒரு பத்தாயிரம் உங்க கம்பெனியில இருந்து வாங்கிக்கச் சொல்லியிருக்கு.. சந்தேகம்னா நீயே போன் போட்டுக் கேளு...'' என்று குட்டு மிரட்டல் மிரட்டியே கற்பகம்மா இது வரைக்கும் ஐம்பதாயிரம் வரைக்கும் இந்த ஐந்தாறு மாதங்களில் வாங்கியிருக்காம். இந்த வெட்கக் கேட்டை யாருகிட்டே போய் சொல்றது?



என்று கஷ்டமா இருந்தது என்று சொல்லாமலே விட்டு விட்டாள்.

இப்போது தோன்றியது.

சொல்லியிருக்கலாம்.

சொல்லிவிட்டு இதை எப்படி நாசூக்காகச் சமாளிப்பது என்று அவரிடமே கேட்டிருக்கலாம் என்று இப்போது நினைத்தாள்.

ஒரு நாளைக்கு தேவைக்கு மேலேயே சுமந்தாற்போல் தோன்றியது. ஏதாவது சூடாகக் குடித்தால் தேவலை போல இருந்தது.

இறங்கி வந்தாள்!

முத்தம்மாவை எழுப்பினாள்.

''என்னடா ராஜாத்தி! இப்ப ஹார்லிக்ஸ் கலக்கித் தரேன்'' என்று எழுந்து வந்து கலக்கிக் கொடுத்தார்.

ஆற அமர டைனிங் ஹாலிலேயே அமர்ந்து குடித்து விட்டு வெளியே வந்தாள்.

சற்று நேரம் பங்களாவுக்கு முன்னால் நடந்தால் தேவலை என்று தோன்றியது.

நடந்தாள்.

அரைமணி நேரத்துக்கு மேல் நடந்து விட்டுத் தனது அறைக்கு மாடிக்கு வந்தவள் தனது அறை பால்கனியில் நின்று வேடிக்கை பார்த்தாள்.

பால்நிலா பொழிந்து கொண்டிருந்தது.

இனிமேல் தனக்கு வாழ்க்கை விளையாட்டாய் இருக்கப் போவதில்லை.. சுமைகள் சுமக்க வேண்டி

யிருக்கும் என்று எண்ணிக் கொண்டே திரும்பியவள் கண்ணில் அந்தக் காட்சி பட்டது.

வெளி கேட்டின் வழியாக சங்கரும், இன்னொரு பெண்ணும் உள்ளே வந்தார்கள். உற்றுக் கவனித்தாள்!

பாலா!

ஒரு நிமிடம் கலங்கிப் போனாள்.

"இதேதடா வம்பு!" என்று கவலை ஏற்பட்டது.

இயல்பாக வந்த மாதிரித்தான் இருந்தது. எதுவும் வித்தியாசமாகக் காணோம். ஆனால் இதை எப்படி விசாரிப்பது?

பர்ஸனல் மேட்டர் பேசாதேம்மா. லைக் பண்ண மாட்டான் என்று அங்கிள் எச்சரித்தது வேறு நினைவுக்கு வந்தது.

உதவிக்கு வந்தவர்களையும் வளைத்துப் போட்டு விட்டார்களோ என்ற கவலை தோன்றியது.

கனகசுந்தரத்திடம் கேட்டுத் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டுமென்று நினைத்தாள்.

அப்போது அவளுக்குத் தெரியவில்லை. இந்த இருவராலும் தனக்குப் பெரிய தலைவலி காத்திருக்கிறது என்று.



## 5

இரண்டு வாரங்கள் ஓடி விட்டன!



சங்கர் வேலைக்கு வந்து ஒரு மாதம் ஓடி இருந்தது.

அந்த சனிக்கிழமை வந்தான்.

''மேடம். நான் வெளியூர் போகணும்'' என்றான்.

எங்கேயென்று கேட்க வாயெடுத்தாள். அடக்கிக் கொண்டாள்.

அன்றைக்கொரு நாள்!

பாலாவுடன் பேசிக் கொண்டு இரவு நேரத்தில் அவன் பங்களாவுக்குள் நுழைந்ததைப் பார்த்தவுடன் அவள் சற்றே கவலையடைந்தாள்.

மறுநாளே கனகசுந்தரத்துக்கு போன் செய்து பேசினாள்.

''அங்கிள். கேட்கறேனேன்னு தப்பா நினைக்காதீங்க. இந்த சங்கர் லேடீஸ் விஷயத்துல எப்படி?'' என்று கேட்டாள்.

''இல்லே! நேத்து அந்த பாலாப் பொண்ணு கூட நைட் டைம்ல எங்கயோ போயிட்டு வந்தார்... எதுவும் வித்தியாசமாத் தெரியலே! ஆனா அந்தக் கற்பகம்மா ஒரு மாதிரி... அந்தம்மாவோட பொண்ணு அதான்...'' என்றாள்.

''அம்மா! அவன் ஒரு மாதிரிப் பையன். ஆனா கேரக்டர்ல அப்படிச் சொல்ல முடியாது. எங்கிட்டேயே அப்பா வேலையைப் பாருங்க நான் ஒண்ணும் ஸ்கூல் பையனில்ல அப்படிம்பான், தம்பி பையன்னாலும் அப்பான்னு கூப்பிட்டுப் பழகுற அளவுக்கு பாசமாக இருந்திட்டேன். நீ அதைப்பற்றி எதையும் கேட்காதே'' என்றார் கட்டளையிடும் விதமாக.

''சரிங்க! அங்கிள்'' என்றாள் சுரத்தே இல்லாமல்.

''அதுக்காக மூட் அவுட் ஆயிடாதே! உங்கிட்ட இவ்வளவு பணிவா இருந்து வேலை செய்யறதே பெரிய விஷயம்... உங்கிட்ட இருக்கிற ஏதோ குணம் பிடிச்சுப் போய்த்தான் அங்க இருக்கான். புரியுதா? ரொம்ப ஸ்ட்ராங்கா லைக்கிங் வச்சுக்குவான். அதனால அவன்கிட்ட கரெக்டா டிஸ்டன்ஸ் கீப்பப் பண்ணி தொழிலை எவ்வளவு தெரிஞ்சுக்க முடியுமோ அவ்வளவு தெரிஞ்சுக்க'' என்றார்.

அதனாலோ என்னவோ எப்போதும் அவனிடம் சொந்த விஷயங்கள் கேட்பதற்கு யோசித்தாள்.

''சங்கர் சார்! ஒரு கார் குடுக்கச் சொல்றேன்'' என்றாள்.

''சரிங்க மேடம்! ஆனால் பெட்ரோல் செலவு என்னுது'' என்றான்.

''இல்ல சார்! இங்க எல்லா ஜி.எம்களுக்கும் பெட்ரோல் அலவன்ஸ் குடுக்கறோம்'' என்றாள்.

''ஓக்கே!'' என்றான் பெரிதும் சமாதானம் ஆகாதவன் போல்.

அவள் புன்னகைத்தாள்.

''சார்! நீங்க எங்க கல்ஸர்னுக்காக தேவைக்கு மேலே உழைக்கிறீங்க... உங்களுக்கு எந்தவிதக் குறைவும் இல்லாம பாத்துக்க வேண்டியது எங்க கடமை அல்லவா?''

முகம் லேசாக மலர்ந்தது.

''ஓக்கே மேடம்! உங்க திருப்திக்காக'' என்றான்.

அவன் சனிக்கிழமை இரவே காரில் புறப்பட்டுப் போவதை தனது அறை ஜன்னலில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.



திடீரென்று மொத்த வீடும் களையிழந்தாற் போல் ஒரு எண்ணம் மனதுக்குள் தோன்றுவது கண்டு ஆச்சரியப் பட்டுப் போனாள்.

* * *

''இத பார்றி...! இதெல்லாம் பேசிக்கிட்டு இருந்தீன்னா வேலையாகாது. இப்படியேதான் யாரு சோறு போடுவாங் களோன்னு நாம அலைய வேண்டியதுதான்'' என்று கோபமாய் கடிந்து கொண்டாள் கற்பகம்.

''அம்மா! உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்யக் கூடாது. நீ உன்னோட வாழ்க்கையை ஒழுங்கா வாழலைன்னா அதுக்கு அக்கா பொறுப்பாக முடியுமா?''

''என்னடி பேசறே.. அந்த ஆளு மட்டும் எனக்குக் குடுக்க வேண்டிய மரியாதையை குடுத்திருந்தா நீயும் இன்னிக்கி... அவளுக்கு சரி சமமாக உட்கார்ந்து ஆட்சி செய்ய வேண்டிய நிலைமை இருந்திருக்கும். ஆனா நீ என்னமோ புரிஞ்சுக்காம நடந்துக்கறே!'' என்றாள் கற்பகம்.

''அதான் கேட்கிறேன்... எங்க தப்பு நடந்துச்சு? எனக்கு என்னமோ கவிப்பிரியா அப்பா அப்படியெல்லாம் ஏமாத்தறவர் மாதிரி தெரியல. நீ தான் ஏதோ திரிசமன் பண்ணியிருக்கேன்னு நினைக்கிறேன்'' என்றாள்.

கற்பகம்மாள் குரல் சட்டென்று அடங்கியது. ''ஆமாடி! நீ எப்பப் பாரு... என்னத்தான் குறை சொல்லுவே!'' என்று எழுந்து போனாள்.

கோயிலுக்குப் போகிறேன் என்று வந்திருந்தார்கள். காரில் அனுப்பி இருந்தாள் கவிப்பிரியா.

தங்களை எல்லா விதத்திலும் கவுரவமாகவே அக்கா நடத்துகிறாள் என்றும் அம்மாதான் கெட்ட எண்ணத்

துடனேயே நடந்து கொள்கிற மாதிரியும் அவளுக்குத் தோன்றியது.

"இவர்தான்டி உங்க அப்பா'' என்று அவள் கிருஷ்ண சாமியின் போட்டோவைக் காட்டியபோது பாலாமணி உற்று கவனித்தாள்.

சினிமாவில் எல்லாம் படத்தைப் பார்த்தவுடனே சரசர வென கண்ணீர் வருகிற மாதிரி உணர்வுகள் எல்லாம் அவளுக்குத் தோன்றவே இல்லை. மாறாக வருத்தம்தான் தோன்றியது.

'ஏன் அப்பா இப்படிச் செஞ்சீங்க..? நீ என்னுடைய மகளே இல்லை என்று உதறிவிட்டுப் போகிற மாதிரி நான் என்ன தப்பு செஞ்சேன்' என்று மனதுக்குள் கதறிக் கொண்டாள். ஆனால் வெளியே காட்டிக் கொள்ள வில்லை.

ஒரு வெறுமையான உணர்வுக்கு வந்திருந்தாள்.

''அம்மா! நான் ஒரு வேலை தேடிக்கப் போறேன். இப்படிப் பெரிய இடத்துல வந்து உட்காந்துகிட்டு பிளாக்மெயில் செஞ்சு சோறு சாப்பிடறதைக் காட்டிலும் உழைத்துப் பிழைப்பது எவ்வளவோ மேல்'' என்றாள் கசப்புடன்.

''போடி! போய் வேலை செஞ்சு பாரு! மாசமெல்லாம் உழைச்சீன்னா ரெண்டாயிரம் ரூபா குடுப்பாங்க... அத வச்சிகிட்டு என்ன செய்வ?''

''அதை வச்சுகிட்டு என்ன செய்ய முடியுமோ செய்ய லாம். நிம்மதியா சோறு சாப்பிடலாம்.''

''எப்படி நிம்மதியா சோறு சாப்பிடுவ? ஒண்டுக் குடித்தன வரிசையில ஒரு வீடு பார்த்தீன்னாலும் ஆயி



ரத்து ஐநூறு ரூபாயாவது வாடகை குடுக்கணும். மீதி ஐநூறு ரூபாயை வச்சுட்டு என்ன செய்வ?''

''வேண்டாம். நம்ம ஊருக்கே போறோம்'' என்றாள்.

''அங்க போய் என்னடி பண்றது? அந்த ஊர்ல நம்மளை யார் மதிக்கிறா? இங்கேயே நான் சொல்றபடி கேட்டீன்னா கொஞ்சம் பணம் தேத்தலாம்'' என்றாள்.

மேற்கொண்டு பேச்சுக்கு இடம் வைக்கவில்லை. கோவிலில் இருந்து வீட்டுக்கு வந்தார்கள்.

பாலா நேராக அலுவலகம் வந்தாள்.

அப்போது சங்கர் மட்டும் அலுவலகத்தில் இருந்தான்.

முகம் வாடி வருகிற அவளைத் திரும்பிப் பார்த்துப் புன்னகைத்தான்.

''என்ன மேடம்! மூட் அவுட் போலயிருக்கு!'' என்றான்.

''சார்! எனக்கு ஒரு வேலை வாங்கிக் குடுங்க'' என்றாள்.

அவன் கம்ப்யூட்டரில் ஏதோ கணக்கு வழக்குகளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தவன் குறுஞ்சிரிப்புடன் திரும்பினான். ஒரு நிமிடம் கூர்ந்து பார்த்தான். பிறகு திரும்பி கேலண்டரைப் பார்த்தான்.

''மேடம் இன்னிக்கி ஏப்ரல் ஒண்ணு இல்லையே. முட்டாள்கள் தினம் மாதிரி ஏதாவது இருக்கா என்ன'' என்றான். கலகலவெனச் சிரித்தான்.

''சார்!'' என்று வேதனையுடன் பார்த்தாள்.

அவன் சிரிப்பை நிறுத்தி விட்டான்.

''சார்! நமக்கு பாத்தியதை இல்லாத இடத்தில் உட்கார்ந்துகிட்டு... ஒட்டுப் புல் மாதிரி பொழப்பு நடத்தி கிட்டு... பிடிக்கல சார்'' என்றாள்.

அவன் கண்களில் சுவாரஸ்யம் கிளம்பியது.

''மேடம்! பிரியா மேடம் உங்களைப் பத்தி அப்படியெல்லாம் நினைக்கிற மாதிரி தெரியலை! நீங்கதான் தப்பா நினைக்கிறீங்க'' என்றான்.

''சார்! அக்கா அப்படி நினைக்கலைன்னா அது அவர்கள் பெருந்தன்மை. ஆனால் எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கலை'' என்றாள் மறுபடியும்.

அவன் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''சரி! இதுக்கு ஒரு ஏற்பாடு செய்யறேன்!'' என்றான்.

அவள் நிம்மதியாகப் போவதை ஆழ்ந்த சிந்தனையுடன் பார்த்தான்.

* * *

''இது தேவையான்னு நினைக்கிறேன்'' என்றாள் கவிப்பிரியா.

''இல்லை... மேடம்! குடுக்கலாம்... தப்பில்லை. அந்த பொண்ணுகிட்ட சின்சியாரிட்டி இருக்கு. உழைப்பில்லாம இங்க இருக்கிறது கஷ்டமாக இருக்கு. அம்மா அக்காவை எக்ஸ்பிளாய்ட் பண்றாங்க இது பிடிக்கலன்னு வருத்தப் படுது'' என்றான்.

அவள் சற்று யோசித்தாள். ''சரி! எப்படியும் நம்ம வீட்ல ஒரு ஆபீஸ் போடணும்னு சொன்னீங்க இல்ல... இன்னொரு கிளார்க்கையும் போடுங்க. போடுங்க உங்களுக்கு உதவியா இருக்கட்டும்'' என்றாள்.

அவன் சிந்தனையின் போக்கு அவனுக்கும் புரிந்தது. தனியாக அவள் பொறுப்பில் அலுவலகத்தை விடுவ



தற்கு யோசிக்கிறாள் என்று தோன்றியது. அதில் உள்ள நியாயமும் புரிந்தது.

அடுத்த இரண்டு நாட்களிலேயே பாலாமணி அலுவலக வேலைக்கு வர ஆரம்பித்தாள். இன்னொரு கிளார்க்கையும் போட்டார்கள்.

கற்பகத்திடம் இருந்து கடுமையான எதிர்ப்பு வரும் என்று எதிர்பார்த்தார்கள். மாறாக மகள் முடிவெடுத்து விட்டாள். ரொம்பவும் வற்புறுத்தினால் விலகிச் சென்று விடுவாள் என்பது புரிய அமைதியாகி விட்டாள்.

உள்ளூர அவருக்கு வேறொரு எண்ணமும் இருந்தது.

பாலாமணியும் சங்கரும் அடிக்கடி நின்று பேசிக் கொள்வதையும் சிரித்துப் பேசிக் கொள்வதையும் கவனித்திருந்தாள். சங்கரைப் போல் ஒரு மாப்பிள்ளை கிடைத்தாலும் போதும் என்ற எண்ணமும் உள்ளே இருந்தது. அதனால் மகள் தயங்கிக் கொண்டு கேட்டவுடனே...

''இதுக்கு எதுக்குடி யோசிக்கிறே? நம்ம ஆபீஸ்ல வேலை செய்யறதுல என்னடி இருக்கு? அதுவும் உன்னோட அக்காவுக்கு நீ உதவி செய்யாம வேற யாரு செய்வா'' என்று ரொம்பவும் பெருந்தன்மையாகப் பேசவும் பாலாமணிக்கே பொசுக்கென்று ஆனது.

அப்படியே போய் சங்கரிடம் போய் சொன்னாள். சங்கர் புன்னகைத்தான். பொருள் பொதிந்த புன்னகை. அவளும் சட்டென்று புரிந்து கொண்டவளாகக் களுக்கென்று சிரித்தாள்.

''ஆமா! அம்மாவுக்கு அப்படியே ஆபீஸை கபளீகரம் பண்ணிறலாம்னு நினைப்பு. நான் அதுக்கெல்லாம் ஒத்துக்க மாட்டேன்'' என்றாள்.

''குட்..!'' என்றான். ''அது மட்டுமல்ல! நீங்க எந்த அளவுக்கு உண்மையா இருக்கீங்கன்னு மேடம் சோதித்துப் பார்ப்பாங்கல்ல'' என்றான்.

''சார்! நான் சொல்றேன் கேளுங்க.. பொய்யும் புரட்டும் உடனடியா பலன் தரலாம். ஆனால் நீண்ட காலத்துக்கு நிற்காது. நீண்ட காலத்துக்கு நாம எவ்வளவுக்கெவ்வளவு உண்மையா இருக்கோமோ அது தான் நிக்கும்'' என்றாள்.

அவன் கண்களில் அவளைப் பற்றிய மரியாதைப் பார்வை தோன்றியது.

''குட்.. திங்கிங்!'' என்றான். அதை கவிப்பிரியாவுடன் பகிர்ந்து கொண்டபோது ''புதுத் துடைப்பம் நல்லாக் கூட்டும். மிஸ்டர் சங்கர்!'' என்றாள்.

அவன் மேற்கொண்டு பாலாமணி பற்றி பாராட்டிப் பேசுவதையே விட்டு விட்டான். ஏனோ பாலாவைப் பற்றிப் புகழ்ந்து பேசினால் தன் எஜமானி அம்மாவுக்குப் பிடிப்பதில்லை என்பது புரிந்தது. அதற்கான காரணத்தைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று நினைத்தான்.

கண்டு பிடித்தபோது கவிப்பிரியாவின் மேல் இன்னமும் மதிப்பு கூடியது.

* * *

தனது மாடி பால்கனியில் இருந்து எதேச்சையாக வெளியே பார்த்தாள் கவிப்பிரியா.

கெஸ்ட் ஹவுஸ் பக்கவாட்டில் இருந்த வெட்ட வெளியில் நின்றபடி உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தான்.

சுற்றிலும் காம்பவுண்ட் இருந்த போதும் மாடியில் இருந்து பார்க்கும்போது தெளிவாய் தெரிந்தது.



தேங்காய்ப் பூ துவாலை ஒன்றைத் தோளின் மீது போட்டுக் கொண்டு அவ்வப்போது முகம் துடைத்துக் கொண்டான். சாதாரணமாய் பார்க்கும்போது மிகவும் அளவான உடல்வாகு இருக்கிறவனாகவே தோற்றமளித்தான். ஆனால் இப்போது நல்ல பலமான உடல்வாகு தெரிந்தது.

நகர்ந்து விட்டாள்.

தன்னுடைய குடும்பத்தைப் பற்றி மட்டும் எதுவுமே சொல்ல மாட்டேன் என்கிறாரே என்று எண்ணிக் கொண்டாள்.

எப்படியாவது அடுத்த முறை ஊருக்குப் போகும்போது விஷயம் வரவழைக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தபோது தான் அது நிகழ்ந்தது.

உடற்பயிற்சி முடிந்தவுடன் ஒரு டீ ஷர்ட் எடுத்து மாட்டிக் கொண்டபடியே கெஸ்ட் ஹவுஸில் நுழைந்து விட்டான். பார்வையில் இருந்து மறைந்து விட்டான்.

''சரி! தனது பகுதிக்குப் போய் விட்டார் போலும்'' என்று எண்ணிக் கொண்டே பார்வையை முன்னாலே ஓட்டினாள்.

கெஸ்ட் ஹவுஸ் முன் பகுதியில் ஒரு சிட் அவுட் இருந்தது. கொஞ்சம் பெரிய சிட் அவுட். அதில் ஒரு சேரில் அமர்ந்தபடி ராமபத்ரன் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தார்.

அந்தப் பகுதிக்கு வந்தான் சங்கர். இருவரும் ஏதோ சிரித்துப் பேசியது தெரிந்தது. அவர் செய்தித் தாளில் இருந்து இரண்டு மூன்று தாள்களை நீட்ட அவன் வாங்கிப் படிக்க ஆரம்பித்தான்.

அதே நேரம்!

ஒரு ட்ரேயில் காபி டிக்காக்ஷன் மற்றும் சர்க்கரை அடங்கிய கோப்பையை எடுத்துக் கொண்டு பாலா போவதை கவனித்தாள்.

திரும்பி அறைக்குள் செல்ல உத்தேசித்த கவிப்பிரியா மீண்டும் திரும்பி நடப்பதைக் கவனிக்கலானாள்.

''குட் மார்னிங்'' என்று சொல்வது உதட்டசைவில் தெரிந்தது.

இரண்டு பேரும் மகிழ்ச்சியான சிரிப்போடு கோப்பைகளை வாங்கிக் கொள்வதையும் சங்கர் ஏதோ குறும்புச் சிரிப்புடன் சொல்லிவிட்டு வாய் விட்டுச் சிரிப்பதையும் பார்த்தாள்.

அவள் கண்கள் நிலை குத்தினாற் போல் நின்று அந்தச் சிரிப்பை உள்வாங்கிக் கொண்டன.

தனது அருகாமையில் ஒரு போதும் அவன் இப்படிச் சிரித்தது இல்லை என்ற எண்ணம் அவள் மனதில் மின்னலாய் வந்து போனது.

லேசாக ஓரத்தில் வலிக்கிறாற் போல் உணர்ந்தாள்.

தனது முன்னிலையில் எப்போதும் பணிவாக நிற்கிறவன் மற்ற சமயங்களில் மிகவும் கம்பீரமாக நடமாடுவதை கவனித்திருந்தாள். ஆனால் எப்போதுமே சீரியஸாகவே இருப்பவன் என்று தான் நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் தோள்கள் குலுங்க அவன் சிரிப்பது அவளுக்கு வித்தியாசமான காட்சியாக இருந்தது.

மனம் வாடிப் போனாற் போல உணர்ந்தாள்.



எதனால் என்று சொல்லத் தெரியாத மன வாட்டத்துடன் மெல்லத் திரும்பி தனது படுக்கை அறைக்குள் நுழைந்தாள்.



# 6

''மேடம்! பாலா மேடம் உங்ககிட்டே ஏதோ சொல்லணுமாம்'' என்று வந்து எதிரில் அமர்ந்தான் சங்கர்.

அவள் கம்ப்யூட்டரில் இன்டர் நெட்டில் மேய்ந்து கொண்டிருந்தவள் திரும்பி அவனைப் பார்த்தாள்.

''வரச் சொல்லுங்க'' என்றாள்.

பாலாமணி வந்தாள்.

''உட்காரு... பாலா!'' என்றாள்.

அமர்ந்தாள். இரண்டே இரண்டு தாள்கள் கொண்ட கணினி அச்சுத்தாள்கள் கொண்ட ஒரு பைலை நீட்டினாள்.

கவிப்பிரியா வாங்கிப் பார்த்தாள்.

எல்லா நிறுவனங்களிலும் இருந்து கற்பகத்தம்மாள் சிறுகச் சிறுக வாங்கியிருந்த தொகையின் பட்டியல் இருந்தது. ஒரு லட்சத்துக்கும் மேல் வந்தது.

''மேடம்! மிஸ்யூஸ் ஆகியிருக்கிற தொகை.. இது'' என்றாள். முகத்தில் ஆழ்ந்த வருத்தம் இருந்தது.

லேசான புன்னகையுடன் கூடிய பாவத்துடன் வாஞ்சை யாகத் தனது சகோதரியைப் பார்த்துக் கொண்டிருந்த சங்கரை ஓரக் கண்ணால் கவனித்துக் கொண்டாள். திரும்பிப் பாலாவைப் பார்த்தாள். முகத்தில் சொல்ல வொண்ணாத வேதனை தெரிந்தது.

கவிப்பிரியாவுக்கும் அவளைப் பார்க்கப் பாவமாகிப் போனது.

"சரி... விடு... எதுக்கு... நீ இவ்வளவு வருத்தப் படறே! எனக்கு ஏற்கனவே இது பத்தித் தகவல் வந்துடுச்சு... எனக்கும்தான் உறவுக்காரங்கன்னு உங்களை விட்டா யாரு இருக்கா?" என்றாள் ஆறுதலாக.

பாலா சட்டென்று மேஜையின் மேல் கவிழ்ந்து அழுதாள்.

கவிப்பிரியா சட்டென்று எழுந்து அந்தப் புறம் வந்தாள். அவள் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

"பாலா! ப்ளீஸ்... அழாதே! நான் இருக்கேன்... இல்ல..!" என்று தேற்றினாள்.

சங்கர் இங்கிதம் அறிந்து எக்ஸ்க்யூஸ் மி என்று எழுந்து போனான்.

பாலா மெல்ல அடங்கினாள். நிமிர்ந்து சகோதரியைப் பார்த்தாள். "எத்தனையோ தடவை அம்மாவுக்குச் சொல் லிட்டேன். குறுக்கு வழிகள் வேண்டாம்.. நேர்மையா இருன்னு.. ஆனா.. அம்மா.. புரிஞ்சுக்கவே மாட்டேங் கறாங்க.. நியாயமா.. நமக்குக் கிடைக்க வேண்டியது எப்பவும் கிடைக்கும்னு" என்றாள் ஆழ்ந்த வருத்தத்துடன்.

"விடு. அவங்க அப்படியே இருந்து பழகிட்டாங்க. நான் இருக்கேன் இல்ல.. உனக்கு" என்று தேற்றினாள்.



மேலும் சொன்னாள். "பாலா டோண்ட் ஃபீல் அன் ஈஸி. உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும். நீ என்கிட்டே ஃப்ரீயா இருக்கலாம். சரியா?" என்றாள்.

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள். தலையை ஆட்டினாள். சற்று கலகலப்பாகப் பேசி அவளை இருக் கைக்கு அனுப்பினாள்.

அதன் பிறகு மெதுவாக வந்தான் சங்கர். அவன் புன்னகைத்தான். அவளும் புன்னகைத்தாள்.

"பாலா இஸ் வெரி ஸ்வீட்.. இல்லைங்க மேடம்!" என்றான்.

"ம்" என்றாள் ஆழ்ந்த சிந்தனையுடன். ஆனால் உடனே வேறு விஷயத்துக்குத் தாவினாள்.

பேச்சுக்கு நடுவே திடீரென்று கேட்டாள். "ஏன் சார் அங்கிளையே மிரட்டிடுவீங்களாம். ரொம்ப பயப்பட றாங்க..." என்று கேட்டாள்.

அவன் சிரித்தான். "மேடம்... அதெல்லாம் சும்மா. என்னவோ தம்பி பையங்கறதுனால அப்பான்னு உரிமை யாக் கூப்பிட்டுக்க முடியுது. ஆனா.. என்ன இருந்தாலும் சொந்தப் புள்ளையா இருந்தா இப்படி முப்பதாயிரம் சம்பளத்துக்கு வேலை செய்ன்னு அனுப்பியிருப்பாங் களா?" என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள். "ஏன் சார் உங்களுக்கு இங்கே வேலை பிடிக்கலையா? நீங்க தானே முப்பதாயிரம் போதும்னீங்க."

"மேடம்! இங்க எனக்கொண்ணும் குறையில்லை. எனக்கு எல்லா அதிகாரமும் கொடுத்து முதலாளிக்கு அடுத்த ரேங்க்ல வைச்சிருக்கீங்க.

ஆனா ஒரு சின்ன வருத்தம். அதுக்காகச் சொன்னேன்'' என்றான்.

''சார்! உங்க பேமிலி பத்தி இதுவரைக்கும் சொன்னதில்லை, நானும் கேட்டதில்லை'' என்று இழுத்தாள்.

''பெரிசா... சொல்றதுக்கு ஒன்னுமில்ல. அம்மா... ரெண்டு சிஸ்டர்ஸ்... நான்.. அவ்வளவுதான். நான் பெரியப்பா நிழல்ல வளர்ந்துட்டேன். இனி ரெண்டு சிஸ்டர்சுக்கும் மேரேஜ் செய்யணும்... கொஞ்ச நிலமிருக்கு.. ஒரு வீடு இருக்கு... ரெண்டு சிஸ்டர்ஸ்க்கும் மேரேஜ் முடிச்சிட்டா... பெரிய கவலை தீர்ந்தது'' என்றான்.

முகத்தில் பொறுப்பான ஒரு மனிதனின் உணர்வுகள் தெரிந்தன.

அந்த நேரத்தில் அவளுக்குத் தோன்றியது. தன்னுடைய குடும்பப் பிரச்சினையையும் அவனிடம் சொன்னால் சிறப்பாக முடித்துக் கொடுப்பான் என்று. எதற்கும் கனக சுந்தரம் அங்கிளிடம் இதைப் பற்றிப் பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

பேசினாள்.

''தாராளமாகச் சொல்லும்மா. ரொம்பக் கெட்டிக்காரன். எப்படிப்பட்ட பிரச்சினையையும் சால்வ் பண்றதுக்கு அழகாக விளக்கம் சொல்வான்'' என்றார். சொல்வதற்காக நேரம் பார்த்து காத்துக் கொண்டிருந்தாள்.

இதற்கிடையில் அன்றைக்கு வேறு ஒரு விஷயம் நடந்தது.

மாலையில் தனது அறையில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள். சில நேரங்களில் பாலாவும் வந்து



அமர்ந்து பார்ப்பாள். பொதுப்படையாகப் பேசிச் சிரித்துக் கொள்வார்கள்.

இன்றைக்கு தயக்கத்துடன் நின்றாள்.

''என்ன பாலா?'' என்றாள்.

''அக்கா!...'' என்று ஒரு கவரை நீட்டினாள். அவளுடைய முதல் மாத சம்பளக் கவர்.

''ஏய்! இத அம்மாகிட்ட குடு'' என்றாள்.

''அக்கா! அம்மாகிட்ட நான் குடுக்கிறதா இல்லை. அம்மாவுக்கு செலவுக்கு எவ்வளவு வேணுமோ அவ்வளவு நீங்க குடுக்கிறீங்க... அதுக்கு மேல எதுக்கு? நீங்க வாங்கிட்டு ஆசீர்வாதம் செய்யுங்க'' என்றாள்.

சட்டென்று காலில் விழுந்தாள்.

''நல்லாயிரு பாலா'' என்று ஆசீர்வதித்தாள் கவிப்பிரியா.

எழுந்து நின்றவளைப் பார்த்துச் சிரித்தாள். எப்படியோ என்னைக் கிழவி ரேஞ்சுக்கு மாத்திட்டே என்று சிரித்தாள்.

''அக்கா எனக்கும் அம்மாவுக்கும் ஆக ஒரு தொகை சாப்பாட்டு செலவுக்கு வாங்கிக்கணும்'' என்றாள்.

கவிப்பிரியா வெறித்துப் பார்த்தாள்.

''அக்கா! அப்படிப் பாக்காதீங்க...! எனக்கென்னவோ அப்பாவைப் பத்தி அம்மா சொல்றதுல முழு நம்பிக்கை இல்லை. எங்கேயோ இடர்ற மாதிரித்தான் இருக்கு. ஆனா உங்க நிழல்ல இடம் குடுத்திருக்கீங்களே அதுவே பெரிய பாதுகாப்பா இருக்கு. எல்லா இடத்திலும் ஒரு கௌரவம் கிடைக்குது. அதுவே போதும் அக்கா. நீங்க கொஞ்சமாவது பணம் வாங்கிக்கணும்'' என்றாள்.

கவிப்பிரியா நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். பிறகு சொன்னாள்.

"சரி... எவ்வளவு குடுக்கணும்னு நினைக்கிறே?"

"அக்கா ஒரு ரெண்டாயிரம் ரூபாயாவது குடுக்கிறேங்க்கா... ஆளுக்கு ஒரு ஆயிரம்ங்கற மாதிரி."

"சரி! முத்தம்மாகிட்ட குடுத்துரு" என்றாள்.

"சரிக்கா!" என்று உற்சாகமாகச் சொல்லிவிட்டுப் போகிற தங்கையை ஆழமாகப் பார்த்தாள்.

'பரவாயில்லை! இவளுக்காவது தன்மான உணர்ச்சி இருக்கிறதே' என்று எண்ணிக் கொண்டாள்.

அதே சமயம் கற்பகம்மா மகளிடம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"எவ்வளவு சம்பளம்?"

"எட்டாயிரம் ரூபா."

கற்பகமோ முகத்தைச் சுழித்தாள்.

"பிசாத்து எட்டாயிரம்" என்று கிண்டலாகச் சொன்னாள்.

"ஆமாம். உழைச்சு சம்பாதித்த பணம்" என்றாள். கற்பகம் அதைக் கண்டு கொள்ளவில்லை.

"எங்கே... குடு."

அவள் கவரை மறைத்துக் கொண்டாள்.

"நம்ம சாப்பாட்டுக்கே மாசம் ரெண்டாயிரம் முத்தம்மாகிட்டே குடுத்திட்டேன். இந்த ஆயிரம் உனக்கு மாசச் செலவுக்கு" என்று நீட்டினாள்.

"மீதி?"



"மீதி என் பேங்க் அக்கவுண்ட்ல இருக்கும். சேமிப்பு. உனக்கே நாளைக்கு உடம்பு சரியில்லாம போனா பாக்கறதுக்கு பணம் வேணும்ல" என்றாள் அவளும் கிண்டலாக.

கற்பகம்மாள் வெறித்துப் பார்த்தாள்.

"இந்த வீட்டுக்கு வந்ததற்கப்புறம் உனக்குக் கொஞ்சம் லொள்ளு ஜாஸ்தியாயிடுச்சு."

"உலகம் புரிய ஆரம்பிச்சுடுச்சி. நியாயம் நேர்மைன்னா என்னன்னு புரிய ஆரம்பிச்சுடுச்சு. அம்மா இப்படி ஒட்டு பிசினாட்டம் ஒட்டிட்டு வாழறதை விட உழைச்சு வாழறது தப்பில்ல."

"ஆமா! நீ வாங்கற சம்பளத்துக்கு வாயில் புடவை தான் கட்டிக்கணும்."

"பரவாயில்லம்மா. பிச்சை எடுத்து பட்டுப்புடவை கட்டுறதுக்கு... உழைச்சு வந்த காசில வாங்குற வாயில் புடவை எவ்வளவோ உசத்தி" என்றாள்.

அவள் அலட்டிக் கொள்ளாமல் சிரித்தாள். "அக்கா ரூமுக்குப் போறேன்" என்று ஓடி விட்டாள்.

கற்பகம்மாள் மனதில் இப்போது கவலை மண்டியது. விஷயங்களை தான் நினைத்த கோணங்களில் நகர்த்த முடியவில்லை என்று அச்சம் ஏற்பட்டது. இதுவரைக்கும் போல் மகளை உருட்டி மிரட்டித் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியாது என்பதும் புரிந்தது.

* * *

பழைய கடிதங்கள், ரிக்கார்டுகள் என்று எல்லா வற்றையும் ஒழுங்குபடுத்தி தேவையான விஷயங்களை கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொள்வதில் முனைப்பா ஈடுபட்டிருந்தார்கள் பாலாவும் சங்கரும்.

அலுவலக அறை முழுமையாக தூய்மை பெற்றது. ராக்கில் அடுக்கி வைக்கப்பட்டு இருந்த லீவர் பைல்களை எடுத்து மேலே அடுக்கினார்கள். கம்பெனிகளில் இருந்து இரண்டு மூன்று பியூன்களை அழைத்து வேலை செய் தார்கள்.

பிற்பகல் உணவுக்குப் போனவர்களில் சங்கர்தான் முதலில் திரும்பி வந்தான்.

சுற்றும் முற்றும் பார்த்தான். ஒரு பத்துப் பதினைந்து பைல்கள்தான் பாக்கி இருந்தன. அதே நேரத்தில் பாலாவும் உள்ளே வந்தாள்.

''பாலா மேடம் ஹெல்ப் பண்ணுங்க இந்த கொஞ்ச பைல்களை நாமளே மேல அடுக்கிறலாம்'' என்றவன், சற்றும் யோசிக்காமல் ஒரு ஸ்டூலை எடுத்துப் போட்டுக் கொண்டு ஏறி நின்றான்.

பாலா பைல்களை எடுத்துக் கொடுக்க கொடுக்க அவன் அடுக்கி முடித்தான்.

இந்த மாதிரி வேலைகள் செய்யும்போது அவன் நகைச்சுவை பேசிக்கொண்டே வேலை செய்வான். பாலாவும் சிரித்துக் கொள்வாள்.

''அப்பாடா! அந்தக் கடைசி பைலை கடாசுங்க. தூக்கி மேலே போட்றலாம்'' என்று வாங்கி போட்டு விட்டுத் திரும்பினான்.

ஸ்டூல் கொஞ்சம் நழுவவே லேசாக சாய்ந்தான். அதற்குள்ளாக பாலா கையை நீட்டித் தாங்கிக் கொண்டாள்.

அவன் இயல்பாக எடுத்துக் கொண்டான். ஆனால் பாலாவுக்குத்தான் சற்றே கூச்சமாகப் போய் விட்டது. முகம் சிவந்து விட்டது.



''ஹலோ மேடம்! என்ன இப்படிக் கூச்சப்படறீங்க... அமெரிக்காவில எல்லாம் ஆண்கள் பெண்கள்னு வித்தியாசம் பாக்காம பழகுறாங்க... இங்க தான் இப்படித் தொட்டாற் சிணுங்கிகளா இருக்கீங்க'' என்று சிரித்துக் கொண்டே திரும்பினான்.

பாலா சிரிக்கவில்லை. அலுவலக அறை வாசலில் கவிப்பிரியா நின்று கொண்டிருந்தாள்.

சற்றே உற்றுப் பார்த்தாற் போல் இருந்தது. உடனே முகபாவத்தை மாற்றிக் கொண்டாள்.

''சங்கர்! எதுக்கு இந்த வேலையெல்லாம் நீங்க செய்றீங்க'' என்றாள்.

''மேடம்! டிக்னிட்டி ஆப் லேபர். உழைப்புக்கு மரியாதை'' என்றான் சங்கர்.

''அதுக்காக நீங்களே எடுபிடி வேலை செய்யணுமா? ரெண்டு பேரை ஹெல்புக்கு வேணும்னு கூட்டிட்டு வந்தீங்களே அவங்க எங்கே?'' என்றாள்.

''அவங்க ரெண்டு பேரையும் ஆபீஸ்க்கு அனுப்பிட்டேன். இந்த பத்து பைலை எடுத்து வைக்கிறேன்னு இன்னைக்கு மத்தியானம் முழுசும் செலவு பண்ணிருவாங்க. அதுவுமில்லாம ஒரு பைல் ஆபீஸ்க்கு அனுப்ப வேண்டியதிருந்தது. கார்ல டிரைவர்கிட்ட குடுத்து அனுப்பும் போது அவங்களையும் திணிச்சு அனுப்பிட்டேன்'' என்றான்.

சிரித்தபடியே சொல்லி விட்டு தொப்பென்று குதித்தான். இரண்டு உள்ளங்கைகளையும் இணைத்து தூசி தட்டிக் கொண்டான்.

இருவரையும் மாறி மாறிப் பார்த்துச் சிரித்தான். இயல்பாக அழகாக இருந்தது.

கவிப்பிரியாவுக்கு மேலே என்ன பேசுவது என்று தெரியவில்லை. சட்டென்று திரும்பி தன் மேஜைக்குப் போனாள்.

"மேடம்! டென் மினிட்ஸ்ல டிரஸ் செஞ்சுட்டு வந்துடறேன்" என்று அனுமதி கேட்டுப் போனான்.

கவிப்பிரியா இறுகிய முகத்துடன் தனது நாற்காலியில் அமர்ந்து கொள்வதை பாலா ஒரு தவிப்புடன் பார்த்தாள்.

அந்த கணத்தில் பாலாவுக்கு புரிந்தது. அக்காவுக்கு தான் சங்கரிடம் சிரித்துப் பேசுவது பிடிக்கவில்லை என்று. அதே கணத்தில் தான் கவிப்பிரியாவுக்கே பாலா சங்கரிடம் நெருங்கி பழகுவது தனக்குப் பிடிக்கவில்லை என்பது புரிந்தது.

* * *

புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள் பாலா.

கிராமத்தை விட்டு வந்ததற்கு பிறகு இந்த வெளி உலகம் புதுமையாக இருந்தது. அதிலும் அம்மா சொன்ன விஷயத்தை நம்பி அக்கா தங்களுக்கு எல்லாவித அந்தஸ்தும் கொடுத்து இங்கே தங்க வைத்தது பெரிய ஆச்சரியமாக இருந்தது.

வசதியான இந்த வாழ்க்கை கௌரவமான இந்த நிலைமை எல்லாம் எதுவரை நீடிக்கும் என்று தெரியவில்லை. இதற்கு நடுவே இந்த சங்கர் சாரின் பழக்கம்.

பெரிய வசதியான குடும்பத்தின் பின்னணியில் வளர்ந்தவர் என்கிற விஷயத்தையே காட்டிக் கொள்ளாமல் எளிமையாகப் பழகுகிறார். ஆனால் ஏனோ சங்கரிடம் கலகலப்பாகப் பழகினால் அக்காவுக்குப் பிடிக்க மாட்டேன்கிறது.



ஒரு மனது சொன்னது. இயற்கை தானே இப்போது அவரது பொறுப்பில் இருக்கிறோம். தான் பாட்டுக்கு ஒரு இளைஞனிடம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தால் பார்ப்பவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள். அவர்களின் கோபம் நியாயம்தான்.

இனிமேல்... அக்காவுக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்யக் கூடாது என்று முடிவெடுத்துக் கொண்டாள். ஆனால் கண்ணை மூடினால் சங்கர் ஸ்டூலில் இருந்து தொப்பென்று குதித்ததும் இரண்டு கைகளையும் தட்டிக் கொண்டு கலகலவென்று சிரித்தது ஆகிய காட்சிகளே அவள் மனதுக்குள் முட்டி மோதிக் கொண்டு வந்து போயின.

வெகு நேரம் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

அதே போல அங்கே கவிப்பிரியாவும் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

என்ன இருந்தாலும் தன் பொறுப்பில இருக்கிறவள் அவள் பாட்டுக்கு பெயரை கெடுத்துக் கொண்டால் தனக்குத் தானே தலைவலி. இருக்கிற பிரச்சினைகள் போதாதென்று இது வேறா? எப்படி அவளுக்குப் புரிய வைப்பது?

சங்கரிடம் பேசலாமா? சொன்னால் கோபித்துக் கொண்டால் என்ன செய்வது? அதற்கு முன்னால் ஒன்று செய்யலாம். முதலில் பாலா தனது தங்கைதானா என்பதை கண்டு பிடித்துக் கொடுங்கள் என்று வேண்டுமானால் சங்கரைக் கேட்டுக் கொள்ளலாம்.

ஒருவேளை... ஒரு வேளை... அவனுக்கு பாலாவைப் பிடித்துப் போனால்...! போனால் என்ன...? கல்யாணம்

செய்து வைக்க வேண்டியது தான். அதெப்படி.. அங்கின் கற்பகம்மாள் பெண்ணை ஏற்றுக் கொள்ள மாட்டார்.

அது சரி.. தன் மனது எதற்கு இப்படிக் கிடந்து போராடுகிறது? சங்கரின் மேல் அக்கறையினாலா, இல்லை பாலாவைப் பற்றிய கவலையினாலா? அவளுக்கே புரியவில்லை.

கடைசியில் எல்லாம் பாலாவைப் பற்றிய அக்கறையினால் தான் என்று முடிவு கட்டிக் கொண்டாள்.

இரண்டு பெண்களும் தன்னைப் பற்றிய யோசனையில் தான் தூங்காமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கிஞ்சித்தும் அறியாத சங்கர் ஆனந்தமாக தனது படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்தான். அதே போல இரண்டு பெண்களும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள் என்பதும் அவர்களுக்குப் புரிந்திருக்கவில்லை.



# 7

திடீரென்று எல்லாமே தலைகீழாகப் போனது மாதிரி இருந்தது.

அலுவலகத்தில் எல்லாமே அமைதியாக இருந்தது. பாலா அலுவலகத்தில் ஒரு மேலாளரிடம் எப்படி நடந்து கொள்வாளோ அப்படி சங்கரிடம் நடந்து கொள்ள ஆரம்பித்தாள்.



சங்கர் முதல் இரண்டு நாட்கள் குறுகுறுவென்று பார்த்தான். அதற்குப் பிறகு,

''சரி.. உன் விருப்பம் அதுவானால்.. ஓ.கே. எனக்கென்ன நஷ்டம் என்பது போல் தெளிவு படுத்திக் கொண்டான்.

அவனும் அதே போல் இருக்க ஆரம்பித்தான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் கவிப்பிரியா விஷயத்தைக் கவனிக்க ஆரம்பித்தாள். அவளுக்கும் குறுகுறுப்பாக இருந்தது. ஆனால் கேட்கவில்லை.

சங்கரின் மனதுக்குள் கோபம் நிறைந்திருந்ததை அவள் உணரவில்லை. பாலாவிடம் மட்டும் அல்லாமல் தன்னிடமும் கூட அவன் அலுவலக ரீதியாகவே நடந்து கொள்ள ஆரம்பித்திருப்பதைப் பார்த்து அவளுக்குக் கவலையாகிப் போனது.

மூன்றாம் நாள் பொறுக்க முடியாமல் சங்கரை அவளே அழைத்தாள். ''சார்! என்ன இது. ஆபீஸ்ல ஏதோ சூழ்நிலையில மாற்றம் தெரியுது. திடீரென்று என்ன ஆச்சு'' என்று கேட்டாள்.

அவன் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டான். ''நீங்கதான் சொல்லணும்'' என்றான்.

''நானா? நான் சொல்றதுக்கு என்ன இருக்குது?'' என்றாள்.

''அப்ப எனக்குத் தெரியாது... மேடம்'' என்றான்.

சட்டென்று அவள் கண்களில் கண்ணீர் நிறைந்தது.

''சங்கர் ப்ளீஸ்! நீங்க வந்ததுக்கப்புறம்தான் யானை பலம் வந்த மாதிரி உணர்றேன். நான் யாருகிட்டயும்

எதுவும் பேசலை. நீங்க ஏதோ தப்பாப் புரிஞ்சிருக்கீங்க..." என்றாள்.

அவன் மறுபடியும் இறுக்கமான முகத்துடன் நின்றான்.

"சார்! ப்ளீஸ்! மறுபடியும் சொல்றேன்... நான் எதுவும் பாலாகிட்டே பேசலே. நீங்க வேண்ணா பாலாகிட்டே கேளுங்க" என்றாள்.

பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

சங்கர் இதை எதிர்பார்க்கவில்லை. நிலைமையை எப்படிக் கையாள்வது என்று தெரியாமல் சற்று நேரம் விழித்தான். பிறகு திரும்பி கெஸ்ட் ஹவுஸ் நோக்கிப் போய் விட்டான்.

* * *

தன்னை மையமாக வைத்து ஒரு பெரும்புயல் அங்கே உருவாகியிருப்பதை அறியாத பாலா வழக்கம்போல் அக்கா என்று உற்சாகமாக அக்காவின் அறைக்குள் நுழைந்தாள்.

படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த கவிப்பிரியா எழுந்து அமர்ந்தாள்.

"பாலா!" என்றாள் அமர்த்தலான குரலில்.

"என்னங்கக்கா" என்றாள்.

"நான் நீ சங்கர்கிட்டே பேசக் கூடாது. பழகக் கூடாதுங்கற மாதிரி ஏதாவது சொன்னேனா?"

"இல்லையே."

"அப்புறம் ஏன் போய் சங்கர்கிட்டே அப்படிச் சொன்னே?"



அவள் உண்மையாகவே விழித்தாள்.

"நானா! நான் போய் சொன்னேனா? அவர்கிட்டே போய் நான் எதுவும் சொல்லலையே!"

"பின்னே.. ஏன் அவரோட பிஹேவியர்ல ஒரு சேன்ஜ் தெரியுது?"

"ஓ!" என்று சற்று யோசித்தாள். பிறகு சொன்னாள்.

"அக்கா! அன்னைக்கு சங்கர் கீழே விழப் போன சமயத்துல நான் தாங்கிப் பிடிச்சேன். அப்ப அங்கே வந்த உங்களுக்கு ஏனோ மனதுக்குப் பிடிக்காத மாதிரி என் மனசுக்குப் பட்டுது. உங்க முகத்திலே கோபம் தெரிஞ்சது. அது அப்ப எனக்குக் கஷ்டமா இருந்துது. ஆனா அப்புறமா யோசிச்சேன். என்ன இருந்தாலும் சங்கர் ஒரு யங்மேன். அவருகிட்டே நான் யதார்த்தமா சிரிச்சுப் பேசினாலும் பார்க்கறவங்களுக்கு அது விகல்பமாப் படலாம். அதோட உங்க கஷ்டடியில இருக்கறப்ப உங்களுடைய கௌரவத்தைப் பாதிக்கிற மாதிரி எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாதுன்னு நான் முடிவு பண்ணினேன்... அதான் கொஞ்ச நாளா நான் அளவா இருந்துக்கறேன்."

அந்த நிமிடத்தில் பாலாவின் பக்குவம் கவிப்பிரியாவுக்கு ரொம்பவும் பிடித்தது.

'பாவம்! இவள் நல்லவள்!' என்று எண்ணிக் கொண்டாள்.

"ஓ! ஆனா.. சங்கர்... ஏதோ நான் உங்ககிட்டே பேசி அவரோட பேசக் கூடாதுன்னு கண்டிச்ச மாதிரி நினைக்கிறாரு. போல இருக்கு" என்றாள். குரலில் வருத்தம் தொனித்தது.

"ஓ! சாரிக்கா! நானே அவர்கிட்டே பேசறேன்... விளக்கம் சொல்றேன்..." என்று திரும்பி இறங்கிப் போனாள்.

''நில்லு! பாலா!'' என்று அவள் தடுக்கு முன்பாக அவள் சிட்டாகப் பறந்து விட்டாள்.

* * *

ஆறு மணிக்கெல்லாம் டெலிபோன் மணி ஒலித்தது. கவிப்பிரியா எடுத்தாள். ''குட்மார்னிங் மேடம்!'' என்று குதூகலமாக ஒலித்தது. ''குட்மார்னிங்..'' என்றாள் சற்றே ஆச்சரியத்துடன்.

''மேடம்! ஒரு டோஸ் பெட்காபி சாப்பிட்டுட்டு இறங்கி வந்தா இங்கே பக்கத்துல பார்க் இருக்கே..! அது வரைக்கும் சின்னதா ஒரு வாக்கிங் போயிட்டு வரலாம்'' என்றான்.

''கிவ் மீ டென் மினிட்ஸ். ஓடி வந்தர்றேன்'' என்று உற்சாகமாக எழுந்தாள் கவிப்பிரியா.

''பை ஆல் மீன்ஸ்!'' என்று கட் செய்தான்.

சுடிதாரில் கடகடவென்று அவள் படிகளில் இறங்கி வருவதை இவன் புன்னகையுடன் நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

நடந்து செல்கிற தூரத்தில் இருக்கிற பார்க்குக்குச் சென்றார்கள்.

முதல் அரைமணி நேரம் வேகமான நடைப் பயிற்சி. அது முடிந்தவுடன் ஒரு பெஞ்சில் அமர்ந்தார்கள்.

அதிகாலை நேரப் பொழுது!

ரம்மியமாக இருந்தது. மிகவும் உற்சாகமாக உணர்ந் தாள் கவிப்பிரியா.

''அப்பாடா! எவ்வளவு சுகமாக இருக்கு. அப்பா இருந்த போது வந்தது'' என்றாள் மகிழ்ச்சி தொனிக்கும் குரலில்.



அவனும் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான் வாஞ்சையாய்.

''அமெரிக்காவில்கூட பெரியப்பாவுக்கு இந்த மாதிரி நடக்கப் பிடிக்கும்'' என்றான்.

சற்று நேரம் பொதுப்படையாகப் பேசிய பிறகு விஷ யத்துக்கு வந்தான்.

''மேடம். ஐம் சாரி. நான் பாலா விஷயத்துல உங்களைத் தப்பா நெனச்சுட்டேன். பாலா வந்து எங்கிட்டே வருத்தப் பட்டுப் பேசினாங்க. பாலாவோட பாயிண்ட்ல இருந்து பார்க்கும்போது அவங்க சொல்றது கரெக்ட்தான். உங்க பாயிண்ட்ல இருந்து பார்க்கும்போது அதுவும் சரிதான். நான்தான் இடையில குழப்பம் பண்ணிட்டேன் போல இருக்கு'' அவள் புன்னகைத்தாள்.

''பரவாயில்லை...'' என்றாள்.

''அதுதான் சமாதானக் கொடி பிடிக்கறதுன்னு முடிவு பண்ணிட்டேன்'' என்றான்.

அப்போதுதான் கவிப்பிரியா அதுவரை தான் மிகவும் எதிர்பாராத அந்த வாய்ப்பு வந்திருப்பதை உணர்ந்தாள். உடனே ஆரம்பித்தாள்.

''சார்! இது ரொம்ப டெலிகேட்டான விஷயம். இன்ஃபாக்ட் அங்கிள் கிட்டே நான் போன வாரமே பேசி னேன். சங்கர் கிட்டே பேசட்டுமான்னு. அங்கிள் அப்பவே பச்சைக் கொடி காட்டிட்டாரு. ஆனா எனக்குத் தான் எப்படி ஆரம்பிக்கறதுன்னே தெரியலை...'' என்றாள்.

அவன் அவளை ஆழமாகப் பார்த்தான். ''மேடம். நீங்க எப்படி வேண்ணாலும் ஆரம்பிங்க. உங்களுடைய நெருங்கிய தோழியா என்னை நினைச்சுகிட்டு எதை

வேண்ணா எங்கிட்டே பேசலாம். என் நெருங்கிய தோழின்னு சொல்றேன்னா.... தோழின்னா ஃப்ரீயாப் பேசுவோம்.. இல்லையா? அதுதான்...'' என்றான்.

அவள் ஆரம்பித்தாள்.

அவன் முழுமையாகக் கேட்டான். சிந்தனையில் ஆழ்ந் தான். பிறகு சொன்னாள்.

''இதுல எங்கயுமே பாலாவோட தப்பு எதுவுமே இல்லையே?''

அவளும் அவனை ஆழமாகப் பார்த்தாள். ''ஆமா! பாலாவோட தப்பு எதுவுமே இல்லே!... ஆனா பாலா மேல எனக்கு எந்த அளவு ரைட்ஸ் இருக்கு. அவங்க ரெண்டு பேருக்கும் எந்த.. அளவுக்கு உரிமை இருக்கு. எல்லாம் கிளியராக வேண்டாமா?'' என்றாள்.

அவன் முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டான். ''மேடம் விஷயம் பூராவும் அந்த அம்மாகிட்டேதான் இருக்கு. ரெண்டு பெரிய கேள்விகள். கற்பகம்மாவைப் பற்றி அந்த அம்மாவைப் பற்றிப் பேசலே. தட் இஸ் ஒன் திங். அனதர் திங் என்னன்னா... அவ்வளவு உரிமையுள்ள கற்பகம்மா.. ஏன் அங்கிள் உயிரோட இருக்கறப்ப வந்து உரிமை கோரலே.. ஒண்ணு அந்தம்மா ரொம்பப் பெரிய தியாகியா இருக்கணும். இல்லே உங்கப்பா துரோகியா இருக்கணும். ஆனா இந்த ரெண்டு ரோலுமே ரெண்டு பேருக்குமே பொருந்தி வல்லையே'' என்றபடி எழுந்தான். தனது தொடையை வலக்கையால் நீவிக் கொண்டான். பெருமூச்சுடன் எழுந்தான்.

கலகலவென்று சிரித்துக் கொண்டு சங்கரோடு இணைந்து வேலை செய்வது அவளுக்குக் குதூகலத்தைத் தந்தது.



ஆனால் தனக்குத்தானே போட்டுக் கொண்ட கடிவாளம் அவளுக்கு மன வேதனையைத் தந்தது.

மெதுமெதுவாகத் தன் மனம் சங்கரை நோக்கிப் போகிறதோ என்ற சந்தேகம் தோன்றியது.

இருக்கறதுக்கே இடத்தைக் காணோம். பறக்கறதுக்கு ஏரோப்ளேன் கேட்டாளாம். அந்தக் கதையாக இருக்கிறதே என்று சோகமாகச் சிரித்துக் கொண்டாள்.

அவளது அறிவு சொன்னது. இயற்கைதான். கொழு கொம்பு இல்லாத நிலையில் யாரைக் கண்டாலும் தன் னுடைய பிரச்சனைகளைத் தீர்க்க வந்தவரோ என்று எண்ணிக் கொள்வது இயற்கைதான் என்று தோன்று கிறதோ என்று எண்ணிக் கொண்டாள். ஆனால், அக்கா வுக்கு எந்த விதத்திலும் இணையாக முடியாது என்றும் தோன்றியது. அக்காவுக்கும் சங்கரிடத்தில் ஈடுபாடு இருக்கிறாற்போல் தோன்றியது.

அதிலும் வரவர அக்காவிடம் ஆளுமைத்திறன் அதிக மாகிக் கொண்டே போகிறாற்போல் தோன்றியது. கம்பீரம், அளவான பேச்சு, நிமிர்ந்த நடை.. உடை என்ற பாவனைகளில் பெருத்த மாற்றம் ஏற்பட்டிருந்தது.

தாங்கள் இந்த வீட்டிற்கு வந்த போது கவலையுடன் தாழ்வு மனப்பான்மையுடனும் நடமாடிக் கொண்டிருந்த அக்கா அல்ல இவள். இப்போது நிற்கிற தோரணையில் கூட ஒரு மாற்றம் தெரிந்தது. முன்பெல்லாம் லேசான மிரட்டல், இல்லாவிட்டால் பிலாக்கணம் என்று சதாய்த்துக் கொண்டிருந்த அம்மா கூட இப்போது அக்கா நின்று லேசாகத் திரும்பி ஒரு பார்வை பார்த்தால் வெலவெலத்துப் போகிறாள். மிகப் பெரிய மாற்றம்.

அப்படிக் கிப்படி சங்கரின் மேல் ஆர்வம் ஏற்பட்டதென்றால் தான் எந்த விதத்திலும் இணையாக முடியாது. சொல்லப் போனால் அவர்கள் இருவருக்கும்தான் பொருத்தம். என்னடா இது! அவர்கள் இருவரும் முடிவெடுப்பதில் தன்னிடம் ஆலோசனை கேட்ட மாதிரி தான் அலட்டிக் கொள்கிறோம். இந்தப் பாழும் மனதுக்கு எப்படியெல்லாம் அற்பமான ஆசைகள் என்று கசப்புடன் எண்ணிச் சிரித்துக் கொண்டாள்.

இரண்டு நாட்களாக மனதைக் குழப்பிக் கொண்டிருந்த எல்லா சந்தேகங்களும் அக்கா அன்றைக்குச் சொன்ன ஒன்றிரண்டு வார்த்தைகளில் பஞ்சாகப் பறந்து விட்டது. அது மட்டுமல்லாமல் மனது இறக்கை கட்டிக் கொண்டு பறக்க ஆரம்பித்து விட்டது.

அக்கா அப்படி என்னதான் சொன்னாள்.

"என்ன பாலா! சங்கருக்கு உன்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சு போல இருக்கு. வார்த்தைக்கு வார்த்தை பாலா ரொம்ப நல்ல பொண்ணுன்னு சொல்றாரு'' என்றாள் புன்னகையுடன்.

பாலாவின் முகம் பூவாய் மலர்வதை ஆழப் பார்த்துக் கொண்டு நின்றாள்.



# 8

''என்னம்மா..'' என்றார் கனகசுந்தரம் அன்பொழுக.



''அங்கிள்! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. சங்கரை நான் குறைவா சொல்றேன்னும் நினைக்காதீங்க.'' என்றாள் தயக்கத்தோடு.

''எதுக்கம்மா! இத்தனை பீடிகை! தைரியமா சொல்லும்மா.''

''இல்லே! நம்ம சங்கர் சார் பாலாகிட்டே கொஞ்சம் ஃப்ரீயா பழகற மாதிரித் தெரியுது.'' என்று சொல்லிவிட்டு நிறுத்தினாள்.

''ஓ'' என்றார் கனகசுந்தரம் அடங்கிய குரலில்.

''இன்ஃபாக்ட் - நான் சங்கர்கிட்டே கற்பகம்மாள் பற்றிய உண்மைகளையும் பாலாவைப் பற்றிய உண்மைகளையும் கண்டு பிடிக்கச் சொல்லி சிக்வெஸ்ட் பண்ணியிருக்கேன். அதோட ரிசல்ட் எப்படியிருக்கும்னு தெரியலே! அதுக்குள்ளே அந்தப் பெண்ணோட மனசிலே சலனம் வளர்க்கறது நல்லதான்னு யோசிங்க அங்கிள்!...'' என்றாள். உண்மையாகவே அவர் யோசிக்க ஆரம்பித்தார்.

''டோன்ட் வொர்ரி. மேடம்! சால்வ் பண்ணிரலாம். ஆனா ஒரு விஷயம். நிச்சயம் பாலா இஸ் எ நைஸ் லேடி'' என்று சிரித்தான்.

கவிப்பிரியா நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். ''சார் நீங்க மறுபடியும் பாலாவுக்கு டிஃபெண்ட் பண்றதா நினைச்சே பேசிகிட்டிருக்கீங்க. அதுக்கு அவசியமேயில்லை. பாலாவை நான் தப்பாவே நினைக்கலை.. பேசவும் இல்லை. அவளாத்தான் எடுத்துக்கறா.'' என்றாள்.

''அதுவும் கரெக்ட்தான்...'' என்றான் சங்கர்.

அந்த நிமிடம் கவிப்பிரியாவுக்கு சற்றே கோபம் கூட வந்தது.

''ஆமா! பாலா எது செஞ்சாலும் சரி'' என்று உள்ளுக்குள் சற்று புலம்பிக் கொண்டாள். ஆனால் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை.

பிரச்சினையை எங்கிட்டே விடுங்க'' என்றான். புன்னகைத்தான்.

எழுந்தார்கள்.

அப்போது அவள் திடீரென்று கேட்டாள். ''சார்! அதென்ன உங்க பேரு வித்தியாசமா இருக்கு? கே.யு. சங்கர்?'' என்றாள்.

''மேடம்! முழுப்பேரு உதய சங்கர். ஆளாளுக்கு உதய் உதய்ன்னு கூப்பிட்டாங்களா? எனக்கென்னமோ உதை உதைன்னு காதுல விழுந்தது. அதான்...'' என்றான்.

இருவரும் சிரித்தார்கள். ''சார்! அப்ப சரி நான் இனிமேயும் சங்கர்ன்னே கூப்பிடறேன்.''

''நீங்க எப்படி வேண்ணா கூப்பிடலாம்.''

வீடு நோக்கி வரும்போது கலகலப்பாகப் பேசிக் கொண்டு வந்தார்கள்.

''என்னப்பா! மார்னிங் வாக்கா!'' என்று வரவேற்றார் ராம பத்ரன்.

''ஆமா சார் மேடத்துக்கு நிர்வாக டென்ஷன் அதிகமா இருக்கு. அதான்... வாக்கிங் யோகான்னு ஆரம்பிச்சர் லாம்னு...'' என்றான்.

''குட் ஐடியா!'' என்றார்.

அதே நேரம்!

காபிக் கோப்பைகளுடன் வந்தாள் பாலாமணி. சற்றே முகம் வாடினாற் போல் இருந்தது.



''பாலா! நீ இவங்களுக்கு காபி குடு.'' என்று தன் அறைக்குப் போய் விட்டாள்.

போகிற போது அவளுக்குத் தோன்றியது தனக்கும் பாலாவுக்கும் ஏதோ ஒரு போட்டி நடை பெறுகிறாற்போல இருக்கிறது என்று.

அதற்கேற்றாற் போல் பிற்பகல் பாலா சங்கரிடம் கேட்டாள்.

''சார்! அக்கா உங்களோட வாக்கிங் வந்துட்டு வந்ததை ரொம்ப என்ஜாய் செஞ்சாங்க போல இருக்கு.''

''ஆமா. எனக்கும் ரொம்பப் பிடிச்சுது. நீங்க வேண்ணா நாளையில இருந்து எங்களோட வாங்களேன்'' என்றான்.

''வேண்டாம் சார்! நான் என் லெவல் தெரிஞ்சு இருக்கறதுதான் நல்லது...'' என்றாள்.

''ஏன்! நான் கூட அவங்களுக்குக் கீழே வேலை செய்யற ஆள்தான். அதுக்காக எந்த நேரமும் காம்ப்ளெக்ஸ் வச்சுகிட்டே அலையணுமா?'' என்றான்.

''இல்லைங்க. சார்! உங்க லெவல் வேற. என்னோட லெவல் வேற. நீங்க அவங்களோட பிரச்சினைகளை எல்லாம் தீர்க்க வந்தவர். ஆனா நாங்க அவங்களுக்குப் பிரச்சினையா வந்தவங்க... ரெண்டுக்கும் வித்தியாசம் இருக்கு. எப்படியோ அக்கா சந்தோஷமா இருந்தாச் சரி'' என்றாள்.

''அப்ப சரி! அதை விடுங்க. இந்த வேலையை முடிச்சர்லாம்'' என்று சிரித்தான்.

வேலையில் ஆழ்ந்தார்கள்.

இரவெல்லாம் பாலாவுக்கு உறக்கமே வரவில்லை. எதிர்காலம் தனக்கு என்ன வைத்திருக்கிறது என்றே புரியவில்லை என்ற கவலை ஒரு புறம். இன்னொரு புறம் சங்கரிடம் இயல்பாக இருக்க முடியவில்லையே என்ற ஏக்கம் ஒரு புறம்.

"அங்கிள்! பாலா.. கிராமத்துல இருந்து வந்திருக்கிற பொண்ணு. அவளுக்கு இங்க இருக்கிற வசதிகள் பாத்தே ஒரே பிரமிப்பு. இதுல சங்கர் சார்! அவளிடம் காட்டறது அனுதாபமா இல்லை வேற ஏதாவதான்னு எனக்குப் புரியலை. ஏன்னா எப்பக் கற்பகம்மாவைப் பத்திப் பேசினாலும் "பாலா. பாவம் நல்ல பொண்ணு தான்னு முடிக்கறாரு" என்றாள்.

"ஓ!"

"அங்கிள் நான் ஒண்ணும் தப்பாச் சொல்லலையே!"

"இல்லம்மா!"

"அங்கிள். நானும் இதைப் பத்தி உங்ககிட்டே பேசும்போது ரொம்ப ஷையாத்தான் ஃபீல் பண்றேன். ஏன்னா அது எப்படி இருந்தாலும் அது சங்கர் சாரோட பர்ஸனல் மேட்டர். ஒரு வேளை ஏதாவது ரிலேஷன்ஷிப் டெவலப் ஆச்சுன்னா அது உங்களுக்கு தர்ம சங்கடமாகலாம். எம்மா. இதைப் பத்தி ஒரு வார்த்தை கூட என் கிட்டே சொல்லலைன்னு கேட்கலாம். அதுக்குத்தான்" என்றாள் தயக்கத்துடன்.

"சரிம்மா.. சரிம்மா! நான் புரிஞ்சுக்கறேம்மா.. என்றார் ஆதரவாக.

போனை வைக்கும்போது அவள் மனதுக்குள்ளேயே ஒரு குறுகுறுப்புத் தோன்றியது.



என்ன இது? எதற்காக நாம் இவ்வளவு மெனக்கெடுகிறோம். சங்கருக்கும், பாலாவுக்கும் நட்பு ஏற்பட்டு விட்டால் அதனால் ஏற்படப் போகிற விளைவுகளும் சங்கடங்களும்தான் தன்னைக் கவலைப் படுத்துகிறதா? இல்லை அவர்களுக்குள் நட்பு ஏற்பட்டு விடுமோ என்ற கவலை தன்னைச் சங்கடப்படுத்துகிறதா? என்ற கேள்வி எழுந்தது.

அதிர்ந்து போனாள். அதுதானே! தனது நிர்வாகத் திறமையை வளர்க்கவும், தனது நிறுவன மேம்பாட்டுக்காகவும் உதவிக்காக உதயசங்கர் வந்திருக்கிறார். அவரை அந்த விதத்தில் பயன்படுத்துவதற்கு பதிலாக மேற்கொண்டு சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது?" என்று அவளது அறிவு கேட்டது.

குழப்பத்தில் ஆழ்ந்தாள்.

அதே சமயத்தில்! குழப்பத்தில் ஆழ்ந்து போன கனகசுந்தரம் அன்றிரவே உதயசங்கரிடம் பேசினார்.

உதயசங்கர் தெளிவாகவும், திடமாகவும் சொன்ன பதிலைக் கேட்கும்போதும் குழப்பத்தில் ஆழ்ந்தார்.

குழப்பம் தீராமலேயே அவன் போனை வைத்தார் என்பதால் உதயசங்கர் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

* * *

பாலா உறக்கமில்லாமல் எழுந்து அமர்ந்திருந்தாள். உள்ளுக்குள்ளே இதயத்தில் சங்கரின் முகம் மின்னி மின்னி மறைந்தது.

எப்போதும் தன்னைக் கண்டவுடனே சங்கரின் முகம் மலரும். தன்னோடு பேசும்போதும் அன்பு நிறைந்த குரலில் பேசுவான்.

'என்னம்மா.. சாப்பிட்டியா!' என்று கேட்கும்போதே, அவள் முகம் மலர்ந்து விடும்.

'சாப்பிட்டேன்.. சார்!' என்பாள்.

பல சமயங்களில் சங்கர் கவிப்பிரியாவுடன் பல அலுவலகங்களுக்கும் விசிட் போய் விடுவான். அப்போதெல்லாம் ஏதோ அலுவலகமே காலியாக இருப்பது போல் உணர்வாள்.

அவர்கள் திரும்பி வந்தவுடனே 'சார்! நீங்க இல்லேன்னா... ஆபீசே நல்லா... இல்லை..' என்பாள்.

'அப்படியா? அவ்வளவுக்கு முக்கியமான ஆளா... நான்!' என்று சிரிப்பான்.

அதில் ஏதோ பொருள் இருக்கிற மாதிரி எண்ணிக் கொண்டு மகிழ்ந்து போவாள்.

'இன்றைக்கு ஏன் இப்படி உறக்கம் வரமாட்டேன் என்கிறது? சரி... உறக்கம்தான் வராவிட்டால் போகிறது. எதற்காக சங்கர் சாரின் முகமே வந்து போக வேண்டும்?

அவளுக்குக் கவலையாகிப் போனது. தரையில காலூணிக்கவே இடத்தைக் காணோம். ஆனா தான் என்ன ஆகாயத்தில் கோட்டை கட்ட ஆரம்பித்து விட்டோம்' என்று.

இன்னொரு மனது சொன்னது. 'சங்கர் சாருக்கு உன் மேல் அனுதாபம். பாவம்.. இந்தப் பெண் அவளுடைய அம்மாவைப் போல இல்லாமல்... கொஞ்சம் நல்லவளாக இருக்கிறாளே..' என்று.

ஆமாம்.. அதுதான்.. உண்மை. தானாக இனிமேல் எதையும் கற்பனை செய்து கொள்ளக் கூடாது. அப்படி



எண்ணம் எதுவும் இருக்குமானால் அதை சங்கர் சார் முதலில் சொல்லட்டும். அது ஒரு வேளை அண்ணன் தங்கைப் பாசமாகக் கூட இருக்கலாம். ஏன்? ஒருவர் சற்றே சிரித்து விட்டால் உடனே ஏன் ஏதாவதொரு உறவு கற்பிக்க வேண்டும். அது நட்பாகக் கூட இருக்கலாம்.

அமெரிக்காவில் கொஞ்ச நாட்கள் இருந்தவர் என்கிறார்கள். பல ஊர்களுக்கு சென்று பார்த்து விட்டு வந்தவர். அதனால் ஆணும், பெண்ணும் இயல்பாகப் பழகினால் என்ன தவறு என்று நினைக்கலாம். கலகலவென்று சிரிப்பதனாலும், உரிமையெடுத்துக் கொண்டு கலாட்டா செய்வதனாலுமே.. ஒருவர் உறவு முறையாகப் பழகுகிறார் என்று சொல்ல வேண்டுமா.. என்ன?' என்று எண்ணிக் கொண்டாள்.

பிறகுதான் ஒரு தெளிவு ஏற்பட்டது. அதுதான் சரி.. அலுவலக ரீதியிலான கலகலப்பான பழக்கம் என்றுதான் அதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

* * *

''மேடம்!'' என்று வந்து நின்றான். சங்கர்.

''என்ன சார்!'' என்றாள் கனகப்பிரியா.

''மேடம்! எனக்கு ஒரு பத்து நாள் லீவு வேணும்?''

''பத்து நாளா..! டென் டேஸ்'' என்றாள்.

''டென் டேஸ்'' என்ற வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்து.

''ஆமா.. மேடம்! ரெண்டு மூன்று விஷயங்கள் சம்பந்தமா.. ரெண்டு மூன்று ஊர்களுக்குப் போக வேண்டியிருக்கு..'' என்றான்.

"ஓ!"

"அதுல ஒண்ணு.. நம்ம சின்னம்மா கற்பகம்மாள் விவகாரம்.. பாலாமணி பற்றிய விவரங்கள்.. தெரிஞ்சுட்டு வர வேண்டியிருக்கு. அதுவும் இல்லாம.. அம்மாவுக்கு சேர்ந்தாப்பல.. ஒரு நாலு நாளைக்குக் கூட எங்களோட வந்து இருக்க மாட்டேங்கறேன்னு.. ஒரே வருத்தம்!"

"ஓ! சரி.. போயிட்டு வாங்க!" என்றாள்.

அனுப்பி வைத்தாள்.

நல்ல வேளையாக ராமபத்ரன் உடன் இருந்தார். இப்போது தொழில்களைப் பற்றி ஓரளவுக்குத் தெளிவும் வந்து விட்டதால் சமாளிக்கலாம் என்றுதான் நினைத்தாள்.

சமாளிக்கவும் செய்தாள். ஆனால்... அந்தப் பத்து நாள் விடுமுறைக்குப் பிறகு உதயசங்கர் கொண்டு வரப் போகிற செய்திகளைப் பற்றி மட்டும் அன்றைக்குத் தெரிந்திருந்தால் அதிர்ந்துதான் போயிருப்பாள்.

* * *

"என்ன பூமணி? என்ன ஆச்சு?" என்று ஓடி வந்தார் கிருஷ்ணசாமி.

"என்னத்தை.. ஆச்சு! எல்லாம் வழக்கம் போல்தான்.." என்று முணங்கிய பூமணியம்மாள் மறுபடியும் இடை விடாமல் இருமினாள்.

அருகில் அமர்ந்து கிருஷ்ணசாமி நெஞ்சை நீவிக் கொடுத்தார். மனைவி படுகிற வேதனையை அவரால் பார்க்க முடியவில்லை.

அது இருக்கும். பத்துப் பனிரண்டு ஆண்டுகள்! அப்போது கவிப்பிரியாவுக்கு ஏழெட்டு வயதுதான் இருக்கும். இதையெல்லாம் புரிந்து கொள்ளக் கூட முடியாத வயசு.



கிருஷ்ணசாமியும் அந்த மாதிரி மனைவி அவஸ்தைப் படும்போது வேலையாட்களை அழைத்து மகளை அந்தப் புறம் அழைத்துப் போய் விடுமாறு சொல்லி விடுவார். எதையும் புரிந்து கொள்ள இயலாத வயது.

"ஏம்பா.. கண்ணம்மா.. பாப்பாவுக்கு விளையாட்டுக் காட்டு.." என்று சொல்லி அனுப்பி விடுவார்.

தாள முடியாத வேதனையில் தூங்கும் மனைவியை வேதனையுடன் பார்த்தார்.

"ஏம்மா! கணவனும், மனைவியும் எல்லா சுக துக்கங்களிலும் பங்கேற்றுக் கொள்ளணும்னு சொல்றாங்களே! அது எவ்வளவு பொய்! உன்னோட இந்த வலியில என்னால பாதி வாங்கிக்க முடிஞ்சா எவ்வளவு நல்லா.. இருக்கும்?" என்பார் வேதனையுடன்.

"வேண்டாங்க! இந்த வேதனை உங்களுக்கு வேண்டாம். நீங்க.. இத்தனை நாள் என்னை நல்லா வச்சுக் கலையா ஒரு நடுத்தரக் குடும்பத்தில் இருந்து வர்றேன். இத்தனை.. நாள் ஒரு தடவை கூட நீ என்னடி கொண்டு வந்தேன்னு ஒரு வார்த்தை நீங்க கேட்டதில்லை. ஏண்டா.. ராசாத்திங்கற ஒரு வார்த்தையைத் தவிர நீங்க எதுவும் கேட்டதில்லை. இத்தனை அன்பும், பிரியமும் எனக்குக் கிடைச்சதே.. பெரிய விஷயம். இது கிடைச்சதே. இதுக்கு.. மேல என்ன வேணும்" என்பார்.

அடுத்து வந்த இரண்டு மூன்று வருடங்களில் அவரது உடல் நலிந்து கொண்டே வந்தது. மூச்சுக் குழாயில் அடைப்பு என்றார்கள். ஏதேதோ காரணங்கள் சொன்

னார்கள். ஆனால், கிருஷ்ணசாமிக்குத் தெரிந்து போனது. மனைவி அதிக நாள் உயிர் பிழைக்க மாட்டாள் என்று.

மகளின் மீது கவனம் செலுத்தினார். அதே ஊரில் இருக்கிற ஒரு நல்ல பள்ளியில் ஹாஸ்டலில் சேர்த்தார். அடிக்கடி போய்ப் பார்த்துக் கொண்டு வந்தார்.

திடீர் திடீரென்று உடல் நிலை சரியில்லாமல் போகும் மனைவியை பதைபதைப்புடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதை மகள் பார்க்க வேண்டாமென்று அவர் நினைத்தார். அதனால் இவை பற்றிய பெரிதாக அறிய எதுவுமில்லாமலே கவிப்பிரியா வளர்ந்தாள். இப்படியே ஒரு நான்கைந்து வருடங்கள் ஓடிவிட்டன.

ஒரு நாள்!

''அய்யா! உடனே புறப்பட்டு வாங்கப்பா..'' என்று முத்தம்மாவிடம் இருந்து போன் வந்தது.

புறப்பட்டு வந்தார்!

மரணத்தின் பிடியில் மனைவி தவிப்பதைப் பார்த்தபடி ஆழ்ந்த வேதனையுடன் அருகில் அமர்ந்து கொண்டார்.

''நீங்க மறு கல்யாணம் செஞ்சுக்குங்க.. என்ன இருந்தாலும்.. ஆம்பளைன்னா.. ஒரு துணை வேணுங்க.. ஒரு ஏழைப் பொண்ணாப் பார்த்து ஒரு கல்யாணம் செஞ்சுக்குங்க..'' என்று திரும்பத் திரும்பச் சொல்லியபடி உயிரை விட்டார் பூமணி.

கிருஷ்ணசாமி எந்தவிதமான வாக்குறுதியையும் கொடுக்கவில்லை. ஆனால், குற்ற உணர்வோடு அமர்ந்து விட்டார்.

யார் யாரோ நின்று கவலையுடன் கதறினார்கள். உறவுக் காரர்கள் எல்லாம் படை திரண்டு வந்து விட்டார்கள்.



பணம் இருக்கிற இடத்தில் உறவு திரண்டு வருவதென்ன கடினமா? திரண்டு வந்தது. பூமணியின் இறுதிச் சடங்குகள் எல்லாம் சிறப்பாகவே நடந்து முடிந்தது.

பதினாறாம் நாள் முடிந்தவுடனே. தனது செக்ரட்டரி ராமபத்ரனை அனுப்பி மகளை ஹாஸ்டலில் இருந்து அழைத்து வந்து விட்டார்.

''ராமபத்ரன்.. சார்! அம்மா படற வேதனையைப் பார்த்தா.. அவளுக்கு மனசு சங்கடப்படுமேன்னு இத்தனை நாள் ஹாஸ்டல்ல விட்டிருந்தேன். இனிமே பூமணியும் இல்லாம.. இந்தப் புள்ளையையும் பிரிஞ்சிருக்கறது ரொம்பக் கஷ்டம்..'' என்று வருத்தத்துடன் சொன்னார்.

உற்றார், உறவினர்கள் எல்லாரும் அடிக்கடி வந்து போனார்கள். எப்போதும் இரண்டு மூன்று பேர் உதவிக் காரர்கள் வீட்டில் இருந்தால் தனிமை தெரியவில்லை.

மகளுக்கும் நன்றாக இருக்கிறதென்று விட்டு விட்டார்.

அன்றைக்கு!

அவரது ஒன்று விட்ட அக்கா.. ராமாத்தாள் ஒரு நாள் வந்து நின்றார்.

''என்னக்கா?'' என்றார். பைல்களை பார்த்துக் கொண்டிருந்தவர் நிமிர்ந்து கேட்டார்.

''தம்பி! பூமணி போய் ஆறு மாசமாச்சு.. நீயும் தனி மரமா எத்தனை நாளைக்கு..?'' என்று இழுத்து நிறுத்தினார்.

''நீயே.. மேலே சொல்லு'' என்பது போல் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த அம்மையார் தயக்கத்துடன் தொடர்ந்தவர்.

''இந்தக் காலத்துல காணாததையா நான் சொல்லிப் போட்டேன். நீ என்னவோ பூமணிகிட்டே உயிருக்கு

உயிராத்தான் இருந்தே. எல்லாருக்கும்தான் தெரியும். அதுக்காக.. அவங்க அவங்களுக்குன்னு ஒரு தொணைன்னு இருந்தாத்தான்... நல்லது. மேலும் அவசரமில்லே.. நல்லா.. யோசிச்சுச் சொல்லு..'' என்றார்.

கிருஷ்ணசாமி ஒன்றும் சொல்லவில்லை. ஒன்று விட்ட அக்கா.. ராமாத்தாள் மட்டும்தான் அவரிடம் கொஞ்சம் துணிவாகப் பேசுவாள்.

அவரே மேலும் தொடர்ந்தார். ''ஏன். தம்பி! உனக்கு.. ஏதோ தொடுப்பு இருந்ததுன்னு ஊருக்குள்ளே ஒரு பேச்சு இருந்துது. யாரும் அதைத் தப்பாப் பேசலை.. பாவம், அவரு மனுஷன்தானே! என்ன செய்வாரு. சம்சாரம் சீக்காளின்னு அனுதாபமாத்தான் பேசுனாங்க..'' என்றார்.

அவர் முகத்தில் வேதனை படிந்தது. ஆனால் ஒன்றும் பேசவில்லை. தன் மேல் பாசம் வைத்திருக்கும் அந்தச் சகோதரியை புண்படுத்த அவர் விரும்பவில்லை.

மௌனமாக அமர்ந்திருந்தார். எடுத்தவுடனே கோபப் படாமல் அமைதியாகக் கேட்பதே ஒரு வெற்றி போல் உணர்ந்த ராமாத்தாள்.

''சரி. சாமி! நான் இதெல்லாம் உன்கிட்டே பேசக்கூடாது. நீ பாத்து எந்தப் பொண்ணை வேணாலும் சொல்லு... கட்டி வைக்கறோம். ஒண்ணும் அவசரமில்லை. யோசிச்சுச் சொல்லு'' என்றார்.

மெதுவாக வெளியே போனார்!

வெளியே நான்கைந்து பெண்கள் காத்துக் கொண்டிருந் தார்கள்.

''ஏன்! ராமாத்தக்கா.. மாப்பிளே என்ன சொன்னாப்லே?''



''எடுத்தவுடனே சரிம்பானா! மெல்ல மெல்லத்தான் சரி பண்ணோணும்! என்னமோ கோபப்படாமக் கேட்டதே நல்லதாப் போச்சு'' என்றாள்.

''ஆமாம். போ! இத்தாப் பெரிய வூட்டுக்கு விளக்கேத் தறதுக்கு ஒருத்தி வராமப் போயிடுவாளா? குடுத்து வச்சிருக்கோணுமே?'' என்றாள் மற்றொருத்தி.

இந்தப் பேச்சுக்கள் எல்லாம் தன் காதில் விழ வேண் டும் என்பதற்காகவே பேசப்படுகிற பேச்சுக்கள் என்று தெரிந்தும் பிடிவாதமாக மனக்கதவைச் சாத்திக் கொண் டார் கிருஷ்ணசாமி.

ராமாத்தாள் கேட்டு விட்டுப்போன கேள்வி நெஞ்சில் அறைந்து தாக்கியது. அந்த நினைவுகள் எல்லாம் படையெடுக்க ஆரம்பித்தன.

தன்னை மீறிப் பழைய நினைவுகள் எல்லாம் படை யெடுப்பதை ஒருவிதக் கையாலாகாத்தனத்துடன் கவ னித்துக் கொண்டு அமர்ந்திருந்தார் கிருஷ்ணசாமி.

## 9



தோட்டத்து பங்களாவே பரபரப்பாக இருந்தது.

''ஏய்! மருதாயி! இன்னைக்கு அய்யா வர்ற நாளில்ல... எல்லாம் சுத்தமா இருக்கா பாருங்க.. அப்புறம் அய்யா வுக்குக் கோபம் வந்துடும்'' என்று கத்திக் கொண்டிருந் தாள் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த அம்மாள்.

''ஆமாடி ராக்கு.. நாலு நாள்.. இருந்தாலும் போதும்.. மனுஷன் எல்லாத் தப்பையும் கண்டு பிடிச்சுருவாரு. ஆஹா! எல்லா இடமும் சுத்தமா இருக்குன்னு நாம ஆசு வாசமா உட்கார்ந்தம்னா.. இந்தா மருதாயி! ஏன் அங்க ஒட்டடை தொங்குது. இத்தனை பேரு இருந்துகிட்டு பங்களாவை நீட்டா வைக்க மாட்டேங்கறீங்க.. அப்படீம் பாரு. அவ்வளவுதான். அதுக்கு மேல திட்ட மாட்டாரு. ஆனா நமக்கு என்னமோ நாம தண்டச் சோறு மாதிரி எண்ணம் தோணிப் போகும்'' என்றாள் மருதாயி.

ஆவலாக எல்லாரும் காத்திருந்தார்கள். கிருஷ்ணசாமி யும் வந்தார்.

எப்போதும் கலாட்டாவாக இருப்பார். அவர் உள்ளே நுழையும் போதே ''என்ன ராக்கி.. புதுசா ஜிமிக்கி.. மாமன் வாங்கிக் கொடுத்தானாக்கும்!'' என்று வேலையாட்களை கலாய்ப்பார்.

எல்லாரும் குறுகுறுவென்று சிரித்துக் கொண்டார்கள்.

ராசியண்ணன் என்பவரை மேற்பார்வைக்காக வைத் திருந்தார். அவரை மேஸ்திரி என்று எல்லாரும் அழைத் தார்கள்.

''என்னங்க தம்பி! ரொம்ப வருத்தமா இருக்கீங்க'' என்று கேட்டார் இரவில் படுக்கப் போகும்போது.

கிருஷ்ணசாமி தோட்ட பங்களாவுக்கு வரும்போதே செய்வதற்கென்றே சில சின்னச் சின்னத் தவறுகள் வைத்திருப்பார். அதில் ஒன்று மது அருந்துவது. இரண்டு நாட்கள் அளவாக அருந்துவார். அப்போது ராசியண் ணன்தான் அவருக்குக் கம்பெனி.



அன்றைக்கு ''ராசி. நாளுக்கு நாள் பூமணியோட நிலைமை மோசமாகிக் கிட்டே போகுது. அவ படற வேதனையை என்னால் கண் கொண்டு பார்க்க முடியலை... எல்லாப் பெரிய டாக்டரையும் பாத்துட்டேன். ஒண்ணும் பண்ண முடியாதுங்கறாங்க'' என்று பேசிக் கொண்டிருக்கையி லேயே குலுங்கிக் குலுங்கி அழுதார்.

''போகட்டும் விடுங்க தம்பி! நீங்க என்ன செய்ய முடியும்? உங்களால் செய்ய முடிஞ்சதெல்லாம் செஞ்சுட் டீங்க. ஆனா கை மீறிப்போனா என்ன செய்ய முடியும் தம்பி. மனசைத் தயாராக்கிக்குங்க தம்பி!'' என்றார்.

''மனசு தயாராத்தான் ஆயிட்டிருக்கு. ஆனா அவ இல்லாம.. ஒரு வாழ்க்கையை நினைக்கவே முடியலையே!'' என்று கதறினார்.

''ஆமா! இப்ப மட்டும் என்னத்தை வாழறீங்க! போங்க'' என்று சற்று உரிமையாகவே பேசினார் ராசியண்ணன்.

''என்ன சொல்றீங்க ராசி?'' என்றார் குழப்பமாக.

''எனக்குத் தெரிஞ்சு நாலு வருஷமா பூமணிக்கு உடம்பு சரியில்லை. நீங்க என்னத்தை வாழ்ந்திருப்பீங்க?'' என்றார்.

''என்ன ராசி! இப்படிப் பேசறீங்க. உடம்பாலே வாழறது தான் வாழ்க்கையா'' என்றார்.

''இதப் பாருங்க தம்பி! இப்பப் பூமணி நல்லா இருந்து.. நீங்க வேற ஒருத்தியைத் தொட்டீங்கன்னா அது பாவம்.. அது முடியாமக் கிடக்கு. ஆனா நீங்க நல்லா இருக்கீங்க. அப்புறம்.. மனுஷன்னா வடிகால் வேணுமில்லே!'' என்றார் ராசியண்ணன்.

''யோவ்!.. எந்திரிய்யா! போனாப் போகுதுன்னு அண்ணன் முறைமைக்காரரேன்னு பக்கத்துல உட்கார வச்சா செட் அப்பா பண்றே...!'' என்று கிருஷ்ணசாமி குரலை உயர்த்தினார்.

''தம்பி! கோவிச்சுக்காதீங்க!.. இதெல்லாம் உங்ககிட்டே பேசற தைரியம் எனக்குத் தானா வர்லே! இதெல்லாம் நானாப் பேசலே! பூமணிதான் உங்ககிட்டே இப்படியெல்லாம் பேசச் சொல்லுச்சு.''

அவருக்கு சட்டென்று போதை தெளிந்தது. வெறித்துப் பார்த்தார்.

''பூமணியா?''

''ஆமாம்! அவரு என்மேல ரொம்பப் பிரியம் வச்சிருக்காரு. நானும் அவரு மேல உசுரையே வச்சிருக்கேன். எனக்குத் தாலி கட்டியிருக்காரு. அதுக்காக எனக்கு உண்மையா இருக்காரு. ஆனா அவரு பிஸினஸ் மேன்! பிஸினஸ்ல எத்தனை டென்ஷன் இருக்கும்னு எனக்குத் தெரியும்... அந்த டென்ஷன் விலகறதுக்கு ஏதாவது வழியிருக்கணுமில்லே! எப்பவாவதுதான் தண்ணி போடுவாரு. எப்படியும் நான் போயிடப் போறேன்.. எல்லா ஃபீலிங்ஸையும் உள்ள வச்சு அடக்கி அடக்கி அவருக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னா.. என் பொண்ணுக்கு யாரு இருக்கா? நீங்களே பார்த்து ஏதாவது ஏற்பாடு செய்ங்க. அப்படீன்னுச்சு.''

அவர் பல்லைக் கடித்துக் கொண்டார். ''பெரிய நள்ரியினியாக்கும்!'' என்றார். பிறகு ஒரு பெருமூச்சு விட்டார். ''சரி ராசியண்ணே! நீங்க கோபிச்சுக்காதீங்க. கோபத்தில..'' என்று தயக்கத்துடன் நிறுத்தினார்.



''பரவாயில்லை. தம்பி! இந்த உடம்பே நீங்க போடற சோத்திலதான் பொழைச்சுக் கிடக்குது. நீங்க கொஞ்சம் கோபப் பட்டாத்தான் என்ன?'' என்று எழுந்து போனார்.

* * *

அதிகாலை நேரம்!

இளங்காலை நேரத்துக் கதிர்கள் அசைந்தாடுவதைக் கண்டு ரசித்தபடி நடந்து கொண்டிருந்தார் கிருஷ்ணசாமி!

நடக்க நடக்கவே வானம் சிவந்தது. மெல்லச் சூரியன் தலை காட்ட ஆரம்பித்தது. செக்கர் வானம் தன் அழகையெல்லாம் வானத்தில் மட்டுமல்லாது பூமியெங்கும் வாரியிறைத்தது.

சற்று நேரம் மனைவியை மறந்து விட்டு, எதிர்காலக் கவலைகளை மறந்து விட்டு இயற்கையோடு ஒன்றிப் போனார்.

தனது இலக்கிய நண்பர் ஒருவர் அடிக்கடி சொல்வது நினைவுக்கு வந்தது.

''யோவ் கிருஷ்! சில வேளைகள்ல கடல் அலையோட அழகில். ரோஜாப் பூக்களோட அழகில.. அந்தி சந்தி நேரத்துல சூரியன் சிவப்படிக்கிற நேரத்துல எல்லாம் நம்மளை ஒரு நிமிஷம் மறந்தர்றோம் பாத்தியா? அந்தக் கணங்கள்லதான் நாம நமக்காக வாழறோம்.. என்று அடிக்கடி சொல்வார்'' இப்போது அதை நினைத்துக் கொள்கையிலே மனைவியின் நினைவும் வந்தது.

நேற்று ராசியண்ணன் மூலமாக மனைவி தனக்கு விடுத்த செய்தியும் நினைவுக்கு வந்தது. அதுவும் குத் தீட்டி போல் தாக்கியது.

அதே நினைவோடு நடந்து கொண்டிருந்தவர் பம்பு செட்டுத் தொட்டிப் பக்கம் வந்தவர் அதிலே யாரோ துளைந்து துளைந்து நீராடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார்.

"ஏய்! யார்ரா அது?" என்று குரல் கொடுத்தார்.

திடுக்கிட்டு எழுந்த உருவம் கண்டு திகைத்துப் போனார்.

பெண்! இளம் வயது! இளம் வயது என்றால் முதிர் கன்னி மாதிரி.

கிராமத்துப் பெண்களுக்கே உரிய லாவகத்தோடு உடல் மறைத்து உடுத்திக் கொண்டிருந்தாள் என்றாலும் திடீரென்று தண்ணீருக்குள் இருந்து எழுந்த விதத்தில் கூடுதலான ஒரு கவர்ச்சி தெரிந்தது. அந்தப் பெண் மிகவும் அழகாக இருந்தாள்.

சட்டென்று கண்களை வேறுபுறம் திருப்பிக் கொண்டார். எங்கோ பார்த்தபடி கேட்டார்.

"யாரு புள்ளே நீ?"

"நானு! கற்பகவல்லிங்க! இங்கே பூச்செடிகளெல்லாம் பாத்துக்கற வேலைங்க எனக்கு..."

"ஓ!" என்றவர் தொடர்ந்து நடந்தார். வேகமாக எதிலிருந்தோ தப்பிப்பவர் போல் நடந்தார். கொஞ்சம் ஆடிப் போய் விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

நேற்றைய பேச்சு சென்ற திசையும் - இன்றைய காலை நேரத்தின் அற்புதப் பின்னணியில் பார்க்க நேர்ந்த பெண்ணின் தோற்றமும் அவருக்குள்ளே ஏதோவொரு விதமான தொல்லையை ஏற்படுத்தின என்றுதான் சொல்ல வேண்டும்.



அவனவன் முப்பத்தியெட்டு வயசுலே கல்யாணம் பண்றவனெல்லாம் இல்லையா? தம்பி! என்று ராசியண்ணன் உருவேற்றியதெல்லாம் வேறு ஒரு பக்கம் நினைவுக்கு வந்தது. மீண்டும் தன் அறைக்கு வந்தவர் காலை நேரத்திலேயே மதுவை நாடினார்.

எங்கே முதலாளியைக் காணோம் என்று தேடிக் கொண்டு வந்த ராசியண்ணன் காலை நேரத்திலேயே பாட்டிலும் கையுமாக அமர்ந்திருப்பதைப் பார்த்து லேசாக அதிர்ந்து போனார்.

"என்னங்க தம்பி!" என்றார்.

"ராசியண்ணே! அந்தக் கற்பகவல்லி யாரு!" என்றார் குழறலாக.

ராசியண்ணன் முகமெல்லாம் பல்லாக மலர்ந்தது.

"அது நம்ம புள்ளைதான். நீங்க ரெஸ்ட் எடுங்க.. சாயங்காலம் நான் எல்லா விவரத்தையும் சொல்றேன்.." என்றார்.

எப்போதும் கம்பீரமாக நிமிர்ந்து பார்க்கிற முதலாளி தயக்கத்துடன் "சரி! டிபன் அனுப்புங்க!" என்றார்.

"நானே கொண்டாடறேன் தம்பி!" என்று போனார்.

எப்போது வேண்டுமானாலும் அவரது படுக்கையறைக்குள் நுழைகிற உரிமை ராசியண்ணனுக்கு மட்டும் தான் கொடுக்கப்பட்டிருந்ததற்குக் காரணம் இதுதான். எந்த இடத்தில் அவரது மரியாதையை எப்படிக் காப்பாற்றுவது என்பதில் சரியாக நடந்து கொள்வார். மது அருந்திய தோற்றத்தில் யாரும் பார்த்து விடக் கூடாது என்பதில் குறியாக இருப்பார்.

* * *

எந்த விஷயத்தைப் பற்றி நினைப்பதைக்கூட கிருஷ்ணசாமி ஒத்திப் போட்டிருந்தாரோ அந்த விஷயத்தையே தொட்டு விட்டார்கள் பூமணியும் ராசியண்ணனும்.

நடுத்தர வயதைக் கூட எட்டவில்லை. முப்பதுகளின் மறுபக்கத்தில் இருந்தார். ஆனாலும் இயற்கையான உணர்வுகளின் ஆட்சியில் இருந்தார்.

மனைவிக்காகத் தான் தியாகம் செய்வதாக நினைத்துக் கொண்டு மனைவியே இப்படி ஒரு யோசனை சொல்லியிருக்கிறார். அது அவளுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. அவள் தன் மீது வைத்த அன்பையும் காட்டுகிறது என்றால் உடனே ஒத்துக் கொண்டால் அது தன்னுடைய பலவீனத்தைக் காட்டாதா?

இராசியண்ணன் இன்னொன்றும் சொன்னார். ''தம்பி! பூமணி அழுகுது. என்னாலும் பிரயோஜனமில்லை, அவரு நிம்மதியையும் கெடுத்துகிட்டு.. நான் என்ன பெண் ஜன்மம்னு புரியலையே! குத்த மனப்பான்மையே என்னைக் கொல்லுதேன்னு கதறுது'' என்று.

அந்த வார்த்தைகள்தான் அவரை உலுக்கியெடுத்தன. இப்படியெல்லாமா பெண்கள் யோசிப்பார்கள்.

மனதில் லேசான சலனம் நேர்ந்திருப்பதை உணர்ந்து கொண்ட ராசியண்ணன் தனது முதலாளிக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் அந்த ஆசையை மேலும் கிளறி விடுவதற்கான ஏற்பாடுகளை மேலும் செய்ய ஆரம்பித்தார்.

மாலை நேரம்!

''ஏன் தம்பி! அப்படியே வாக்கிங் போகலாமா?'' என்றார்.



கிருஷ்ணசாமிக்கும் கொஞ்சம் அப்படி நடந்தால் தேவலை போல இருந்தது.

பகலெல்லாம் உறங்கியிருந்தார். இதுவரையிலும் தங்குகிற இரண்டு மூன்று நாட்களிலும் கணக்கு வழக்குகள் பார்ப்பதில் ஆர்வமாக இருப்பார். இந்த முறை அறையை விட்டு வெளியே வராமல் முழுக்க உறங்கியிருந்தார். அதனால் தொந்தரவு செய்யக் கூடாது என்பதை வேலையாட்களும் புரிந்து கொண்டிருந்தார்கள்.

இப்போது மெதுவாக நடை பயின்று கொண்டிருந்தார்கள்.

''ஏன். தம்பி! நல்லா யோசிச்சுச் சொல்லுங்க! அந்தக் கற்பகம் புள்ளை மனதுக்குப் பிடிச்சிருந்தா...'' என்று இழுத்தார்.

''ஐயய்யோ! அதெல்லாம் எதுக்கு அண்ணே!'' என்றார். ஆனால் குரலில் அழுத்தமில்லை.

''ஏன். தம்பி இப்படிப் பேசறீங்க... நம்ம மேக்கால தோட்டத்துக் கவுண்டரு.. ஊருக்கு ஒண்ணுன்னு குடும்பம் நடத்தறாரு...''

''அவருக்கு வைஃப் குணம் சரியில்லே. அதுக்காக அவ்வளவு கீழே போகணுமா?''

''சரி. தம்பி! நான் அப்படியெல்லாம் சொல்லலே. இந்தக் கற்பகம் புள்ளைக்கு அம்மா அப்பா யாரும் இல்லை. ஆதரவில்லாம நிக்குது. நீங்க தொட்டாக் கைவிட மாட்டீங்க. மனசு ஒத்து வர்லேன்னா ஏதாவது கோயில்ல வச்சு மாலையை மட்டும் மாத்திக்கங்க'' என்றார்.

சொல்லி வைத்தாற்போல் கற்பகத்தின் வீடு இருந்த திசை நோக்கியே அழைத்துச் சென்றார்.

இரண்டே அறைகள் கொண்ட ஓட்டு வீடு. சுற்றிலும் மலர்ச் செடிகள். அதைப் பராமரிக்கும் வேலை அவளுடையது. அவளது அப்பா பார்த்துக் கொண்டிருந்த வேலை. அவன் இறந்த பிறகு அவள் செய்தாள்.

"பொறு புள்ளே! நானே உனக்கு நல்ல மாப்பிள்ளை பார்த்து செய்து வைக்கிறேன்" என்று ராசியண்ணன் சொல்லிக் கொண்டிருந்தார்.

பூமணி போனில் கண்ணீர் விட்டதும் முதலில் அவள் மனதில் தோன்றிய உருவம் கற்பகவல்லிதான். ஆனால் எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை.

அதற்கேற்றாற் போல் கற்பகவல்லியிடம் போய் இந்த யோசனையைச் சொன்னவுடனே அவள் கரகரவென்று கண்ணீர் விட்டாள்.

"கேக்கறதுக்கு ஆளில்லேன்னுதானே என்னைய இப்படிக் கேட்டுப் போட்டீங்க" என்று அழுதாள்.

"ஐயய்யோ. அப்படியில்ல தாயி! பெரிய மனுஷன் தொடர்பு என்னைக்கும் நல்லதுதானே! யாரு கண்டா உன்னைப் புடிச்சுப் போய் நாளைக்குக் கல்யாணமே செஞ்சாலும் செஞ்சுக்குவாரு. பூமணி ரொம்ப முடியாமத் தான் இருக்கு. பூமணியே போன் பண்ணிக் கேட்கவும் தான் இப்படி யோசனையே எனக்கு வந்துச்சு.. அது மட்டுமில்ல.. கண்ணு. எனக்குத் தெரிஞ்சு அய்யா ரொம்ப நல்லவரு.. பொறுப்பெடுத்துட்டா.. ஆயுசுக்கும் நீ கண்ணு கலங்காம பாத்துக்குவாரு" என்றார்.

கற்பகவல்லி மௌனமாக நின்றாள். "யோசி.. தாயி! ஒண்ணும் கட்டாயமில்லே!" என்று சொல்லியிருந்தார்.

கற்பகவல்லி நல்ல நிறமும் அழகுமாக இருப்பாள். பார்ப்பவர் கண்களை சுண்டியிழுக்கிறாற் போன்ற தோற்



றம். சொல்லப் போனால் கிருஷ்ணசாமி குடும்பத்துக்கு தூரத்துச் சொந்தம். குழப்பத்தில் இருந்த மனதில் கிருஷ்ண சாமியைப் பார்த்தவுடன் தெளிவு ஏற்பட்டு விட்டது. அந்த கம்பீரமான தோற்றமும் ஆகிருதியான உடல் வாகும் அவள் மனதைத் தாக்கி விட்டது.

யோசிக்க ஆரம்பித்தாள்.

"இப்ப என்ன சொல்லிப் போட்டாரு ராசியண்ணன்னு நாம கோபிச்சுகிட்டோம். அதிக பட்சம் நம்ம வசதிக்குக் கூலிக்காரன்தான் கிடைப்பான். அவனும் பகல் பொழுது பூராவும் உழைச்சுட்டு ராத்திரியில தண்ணி போட்டுட்டு வந்து அடிக்கடி உதைப்பான். வேற என்ன செய்வான்! அது ஒரு பிழைப்பாவா இருக்கப் போகுது? ஆனா கிருஷ்ண சாமி அய்யாவுக்கு தொடர்புன்னு தெரிஞ்சாலே அவனவன் தூரத்துல மரியாதையா நிற்பாங்க. மாசம் ஒரு நாள் ரெண்டு நாள் வந்துட்டுப் போனாலும் வாழ்க்கை வசதிகள் இருக்கும். ஏன் நம்ம மனசு சாந்திக்கு ஒரு விநாயகர் கோவில்ல முன்னாடி நின்னு மாலையைக் கழுத்தில் போடுங்கன்னா போட்டுட்டுப் போறாரு" என்று நினைத்தவுடனே மனது தெளிவாகி விட்டது.

பம்பு செட்டுத் தண்ணீர் தொட்டியில் அவரைப் பார்த்த வுடனே அவள் முடிவெடுத்து விட்டாள். அதற்கேற்றாற் போல் ராசியண்ணன் பிற்பகலில் வந்தார்.

"ஏய் புள்ளே! ஐயாகிட்டே பேசியிருக்கேன். அப்படி இப்படின்னு சாயங்காலம் கூட்டிட்டு வரேன். ரொம்ப அலங்காரமாவும் இல்லாம ரொம்ப அழுதும் வடியாம. ஏதோ ஒரு காபித் தண்ணி வாய்க்குப் பிடிக்கற மாதிரி வச்சுக் குடு..." என்று தயார் படுத்திப் போனார்.